# வக்கீல்

484

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

OFFICE ... BOOKS
4-AUG 1954
MADRAS




ஏரளமாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL ◆ TAMIL LAW MAGAZINE.**

## "வக்கீல்"

### பொது மக்களுக்கான
### உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 எப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்— தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]

---

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதாரர்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதாரர்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

---

## "வக்கீல்"
### (விளம்பர விகிதம்)
### ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

---

# தமிழில்
# சட்டப் புத்தகங்கள்
### "வக்கீல்" பிரசுரங்கள்

**"வக்கீல்" 1953-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை .ரூ 3 120

**"வக்கீல்" 1952-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

**"வக்கீல்" 1951-ம் வருடம்** பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

**சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்** [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

**தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்** [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்] ரூ. 0 6 0

**சரக்கு விற்பனைச் சட்டம்** [The Indian Sale of Goods Act] ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்
வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)

V. S. & Sons

REGISTRAR OF BOOKS
4-AUG 1954
MADRAS

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்
## பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள் :
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்
கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்:
ராணி ரெங்கய்யர்
சன்ஸ்
கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

1006 மங்கி மார்க்
2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்
சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்
கிருஷ்ண விலாஸ்
உதயகிரி விலாஸ்
வாசனை சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பதற்கு மிகச்
சிறந்தவைகள்
தயாரிப்பவர்:—
கிருஷ்ண விலாஸ்
336, கீழ மாசிவீதி, மதுரை.
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.
M. ஏகாம்பரம் செட்டியார்,
புரோப்ரைட்டர்.

டிரேட்மார்க் பேடண்ட் & டிசைன்
ரிஜிஸ்டர் மற்றும்
காபிரைட்
விபரத்திற்கு: ரிஜிஸ்டர்
ஐ. ஸி. ஏஜன்ஸி,
225, நாயக்கர் புதுத் தெரு, :: மதுரை.

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 6 — ஏப்ரல் 1954 — இதழ் 4

ராஜாஜி 3

"புத்தி கெட்ட இரண்டு பூனை" 4

பாகிஸ்தானில் முஸ்லீம் லீக் மறைகின்றது 4

தவறுதலான விற்பனை வரி வசூலும் சர்க்காரின் கடமையும் 4

புதிய சட்டங்கள் 6

வரிகள் 7

வழக்கும் - தீர்ப்பும்

கொலை வழக்கு அப்பீலில், தீர்ப்பு எழுதிக் கையெழுத்திட்ட ஹைகோர்ட் உயர் நீதிபதி இறந்தார். இத்தீர்ப்பே செல்லாதென, சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்பு. 9

பஸ்ஸில் இடம் இருக்கும் போது கண்டக்டர் ஒரு பிரயாணியை ஏற்றிக் கொள்ள மறுக்கலாமா? 10

விற்பனை வரிக்கு விற்பனை வரி விதிப்பது செல்லாது. சென்னை ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு 11

மோட்டார் பஸ் கம்பெனியார் பழைய மோட்டார்களை விற்றால், அதற்கு விற்பனை வரி உண்டா? 11

கரும்புப் பயிர் செய்யும் விவசாயி கரும்பை வெல்லமாக மாற்றி விற்றால் விற்பனை வரி உண்டா? 11

சென்னை இந்து மத-தர்மபரிபாலனச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லா. ஷிரூர் மடாதிபதியின் வழக்கு அப்பீலில் சுப்ரீம்கோர்ட்டாரின் தீர்ப்பு. 12

தொழிற்சாலைச் சட்டம் 13

கேள்வியும் – பதிலும் 17

உங்கள் தீர்ப்பு என்ன? 21

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 6 ஏப்ரல் 1954 இதழ் 4


## ராஜாஜி

சென்ற இரண்டு ஆண்டுகளாகச் சென்னை முதல் மந்திரியாக இருந்த ராஜாஜி அவர்கள் அப்பதவியைவிட்டு விலகிக் கொண்டு விட்டார். எப்படியாவது முதல் மந்திரியாக வர வேண்டுமென்ற ஆசையினால் அன்னார் அப்பதவியைக் கைப்பற்றியவரல்ல. அவர் ஏற்கனவே ஒரு தடவை முதல் மந்திரியாக இருந்து இந்தியாவிலுள்ள மற்ற மந்திரி சபைகளுக்கெல்லாம் வழிகாட்டியவர் தான். பிறகு மத்திய அரசாங்க மந்திரியாகவும் வங்காளக் கவர்னராகவும் இருந்திருக்கிறார். இந்தியாவில் ஒரு தனி மனிதன் எந்த உயர்ந்த பதவியை அப்பொழுது அடையக் கூடுமோ அப்படிப்பட்ட கவர்னர் ஜெனரல் பதவியைச் சில காலம் பெருமையுடன் வகித்து வந்த ராஜாஜி அவர்கள், மீண்டும் தள்ளாத வயதில் சென்னை முதல் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டது அதிகார மோகத்தால் அல்ல. ராஜாஜி ஒரு மேதாவி என்பதை அவருடைய விரோதிகளே ஒப்புக் கொள்ளுவார்கள். அத்துடன், தியாகம், நேர்மை என்ற இரண்டு அரிய குணங்கள் அவரிடம் கூடியதால், ராஜாஜி அவர்கள் எப்பதவியை வகித்தாலும், அங்கே ஒரு ஒளி வீசியது. பக்க வட்டாரங்களும் தூய்மை அடைந்தன. அதில் சந்தேகமில்லை. ராஜாஜி அவர்கள் சென்னை முதல் மந்திரியாக வந்தவுடன் அரசாங்கச் சூழ்நிலையும் திடீரென மாறுதலடைந்தது. ராஜாஜியின் ஆட்சிக் காலத்தில், மந்திரிகளோ, பெரிய பெரிய அதிகாரிகளோ லஞ்சம் வாங்குகிறார்களென்றோ, சிபார்சு கேட்கிறார்களென்றோ ரயில்வே ஸ்டேஷன்களிலும், பஸ்ஸ்டாண்டுகளிலும், மார்கெட்டுகளிலும், கண்ட இடங்களிலும், பொது மக்கள் ஒருவருக்கொருவர் காதுடன் ரகசியமாகப் பேசிக்கொள்ளவில்லை. ராஜாஜியின் ஆட்சிக் காலத்தில் சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் சொந்த வியாபாரத்துறைகளில் அதிக கவனம் செலுத்தவில்லை; பணம் குவிக்கவில்லை; அவர்கள் கலெக்டர்களுக்கு எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் சிபார்சுகள் செய்யவில்லை. ராஜாஜியின் ஆட்சிக் காலத்தில் சர்க்கார் காரியதரிசிகள் மந்திரிகளை விரட்டி யதேச்சாதிகாரமும் புரியவில்லை.

ஆனால் ராஜாஜி செய்த தவறு ஒன்று உண்டு. சட்டசபை அங்கத்தினர்களைத் 'தாஜா' செய்து வைத்துக் கொள்ள அவருக்குத் தெரியவில்லை. ஆனால் அவ்விதம் சட்ட சபை அங்கத்தினர்களைத் திருப்தி செய்தே வைத்துக் கொண்டிருக்கும் ஒரு முதல் மந்திரிக்கு வேறு ஒரு உருப்படியான காரியம் செய்யவோ, பொதுமக்களைக் கவனிக்கவோ நேரம் இருக்காதென்பது ராஜாஜிக்கு நன்றாகத் தெரியும் போலும்! புதிய முதல் மந்திரி எந்த ரகத்தைச் சேர்ந்தவரென்று கவனிப்போம்!

## "புத்திகெட்ட பூனை இரண்டு"

ஆரம்பப் பாடசாலைகளில் படித்த பாடங்களையும் பாடல்களையும் நாம் மறந்து விடுகிறோம். பணியாரத்தைத் திருடிய பூனைகள் இரண்டும் சண்டையிடவே அவைகள் ஒரு குரங்கை மத்தியஸ்தமாக வைத்துக் கொண்டு முற்றிலும் ஏமாந்த கதையை நாம் மறந்தே விட்டோம். ஆனால் இன்று திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தின் முதல் மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கும் திரு. பட்டம் தாணுப்பிள்ளை அவர்கள் அப் பால பாடத்தை மறக்கவே இல்லை. இல்லாவிட்டால், திருவாங்கூர்—கொச்சி சட்ட சபையில் நாற்பத்தைந்து ஸ்தானங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சியும், முப்பத்திரண்டு ஸ்தானங்களைக் கைப்பற்றிய கம்யூனிஸ்ட்டுக் கட்சியும் திருதிரு வென்று விழித்துக் கொண்டிருக்கும் போதே, பத்தொன்பது அங்கத்தினர்களைக் கொண்ட பிரஜா—ஸோஷலிஸ்டுத் தலைவராகிய அவர் அரசாங்கத்தை நடத்தத் தைரியமாக முன் வருவாரா?

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.




## பாகிஸ்தானில் முஸ்லீம் லீக் மறைகின்றது

பாகிஸ்தானத்தின் ஜனத் தொகையில் நூற்றுக்கு ஐம்பத்துஆறு மக்கள் கிழக்கு வங்காளத்தில்தான் இருக்கின்றனர். இதைக் கிழக்குப் பாகிஸ்தானம் எனச் சொல்லுகின்றனர். கிழக்குப் பாகிஸ்தானில் இப்பொழுது ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது. இத் தேர்தலில் அங்குள்ள முஸ்லீம் லீக் கட்சியானது இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அக் கட்சிக்குச் சட்ட சபையில் ஒன்பது ஸ்தானங்கள்தான் கிடைத்திருக்கின்றன. அக் கட்சியைச் சேர்ந்தவரும் இதுவரை அங்கே முதல் மந்திரியாக இருந்தவருமான நூருல் அமீனைத் தேர்தலில் எதிர்த்தவர் கலிக் நவாஸ் என்ற ஒரு பள்ளிக்கூட மாணவர். பொதுமக்கள் பெருவாரியான வாக்கினால் அம் மாணவரையே தேர்ந்தெடுத்தனர்.

ஏன் கிழக்குப் பாகிஸ்தானம் அவ்விதம் செய்தது? இவர்களுக்கு முஸ்லீக் பிடிக்கவில்லையா? அல்லது அமெரிக்க ராணுவ உதவியை நாடும் கராச்சி சர்க்காரை இவர்கள் விரும்பவில்லையா? அல்லது கிழக்குப் பாகிஸ்தானம் கம்யூனிஸட்டு நாடாகி விட்டதா?

கிழக்கில் இத் தொல்லையும், மேற்கில் பட்டாணியர்களுடைய கலகமும் இருப்பதால்தான் உள் நாட்டுக் கலகங்களுக்கே பயந்து பிரதமர் முகமதலி அமெரிக்கரிடம் சரண் புகுந்தாரா?

## தவறுதலான விற்பனை வரி வசூலும்—சர்க்காரின் கடமையும்

ஒரு வியாபாரியானவர் சரக்குகளை விற்பனை செய்யும்போது சரக்கு விலையுடன் விற்பனை வரியும் வசூல் செய்கிறார். அவருக்கு விற்பனை வரி விதிக்கப்படும்போது சரக்கு விலைக்கு மட்டில் வரி விதிக்காமல்

அவர் வசூல் செய்த விற்பனை வரிக்கும் விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. ஏனென்றால் "மொத்த வியாபாரத் தொகை" என்பதற்கு அவ்விதம் அர்த்தம் செய்து சர்க்கார் அதிகாரிகள் வசூல் செய்து வந்தனர். சில வியாபாரிகள் இது விஷயமாகச் சர்க்கார் மீது தாவா செய்தும் ஜயித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தாவாவில் ஏற்படும் தீர்ப்பானது அந்தத் தாவாவில் கட்சிக்காரர்களாக இருப்பவர்களுக்குத்தான் பொருந்துமாகையால், சர்க்கார் எப்பொழுதும் போல் மற்ற வியாபாரிகளிடமிருந்து விற்பனை வரிக்கு விற்பனை வரி வசூல் செய்தே வந்திருக்கின்றனர். மேலும் ஹைகோர்ட் அல்லது சுப்ரீம் கோர்ட்டாரின் அபிப்பிராயம் ஒன்றும் இல்லாததினால் சர்க்கார் அவ்விதம் வசூல் செய்திருக்கலாம். இப்பொழுது ஒரு வழக்கில் நமது ஹைகோர்ட்டாரே இவ்விதம் விற்பனை வரிக்கு வரி வசூல் செய்யச் சட்டத்தில் இடமில்லை என்று அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்து விட்டபடியால், அத் தீர்ப்புக்குக் கீழ்ப்படிந்து அத் தீர்ப்பில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்லாமல், எல்லா வியாபாரிகளுக்கும் உடனடியாகப் பரிகாரமளிப்பது சர்க்காரின் கடமையாகும். இதுகாறும் அவர்கள் தவறுதலாக வசூல் செய்திருக்கும் அதிக வரித் தொகையை அந்தந்த வியாபாரிக்குத் திருப்பிக் கொடுத்து விடுவதே சரியான முறையாகும். ஹைகோர்ட்டாரின் தீர்ப்பானது இந்த ராஜ்யத்திலுள்ள எல்லாக் கோர்ட்டுக்களையும் கட்டுப்படுத்தும். ஒவ்வொரு வியாபாரியும் தம்மிடமிருந்து அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகைக்குச் சட்டப்படி சர்க்கார் மீது தாவா செய்யும் உரிமை இருந்தாலும் அப்படிச் செய்து டிக்ரி வாங்குபவர்களுக்கு மட்டில்தான் 'ரீபண்டு' கொடுக்க வேண்டுமெனச் சர்க்கார் நினைப்பது தவறாகும். மேலும் சர்க்காரின் செய்கைகளைக் குறித்து நமது உயர் நீதிமன்றங்களில் தீர்ப்புகள் ஏற்படும் போது, அவ்விஷயத்தைக் குறித்து, சர்க்கார் என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றனர் என்பதைப் பொதுமக்களுக்கு அவ்வப்பொழுது அறிவிப்பதும் சர்க்காரின் கடமையாகும்.


ராஜபாளை
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஸ்தாபிதம் 1941
ரிஜிஸ்டர் நெ. 152070




ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
Pro: A. சின்னக்கனி நாடார் டோர் நீர். 7.
நெம்பர் 1 போலீஸ் ஸ்டேஷன் சந்து,
மதுரை.

# வெற்றி!

சாஸ்திரப்படி கண்களைப் பரிசோதித்துப் போடப்பட்ட கண் கண்ணாடிகள் மூளை, நரம்புகளுக்கு புத்துணர்ச்சி ஊட்டி, கண்களைப் பாதுகாத்து வசீகரத்தையும் உண்டாக்குகின்றன.

எங்களிடம் உள்ள கடிகாரங்கள்
உங்கள் அருமையான

# நேரம்

வீணாவதைத் தவிர்க்கின்றன.
சட்டநிபுணர்களின் மதிப்பைப் பெற்ற
அமெரிக்கன் ஆப்டிகல் கம்பெனி
[REGD]
7. டவுன்ஹால் ரோட், மதுரை.
G. K. M. YUSOOF,
SOLE PROPRIETOR

# புதிய சட்டங்கள்

### சுருக்கியும்-வரிசையாகவும்

## 1953-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்.

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

### 19. சென்னைக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்திருத்தம்.

Madras Cooperative Societies-Amendment Act 1953. சென்னைக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் புதிதாக 57 BB என்று ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:- முன் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த இடங்களில் இருந்த சங்கங்களுக்கு 1-4-1949 தேதியில் வர வேண்டிய கடன் தொகைகளை வசூலிக்க இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 10-2-1954 முதல் ஒரு வருடம் வரை, அதாவது 10-2-1955 வரை காலாவதி கெடு நீடிக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் அவ்விதக் கடன்கள் விஷயமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஏதாவது தீர்ப்பு, உத்தரவு அல்லது அவார்டு ஏற்பட்டிருந்தாலும், அவற்றை ரத்துச் செய்து இத்திருத்தச் சட்டம் அப்போது அமுலில் இருந்தால் எப்படியோ அவ்விதம் தீர்ப்பு ஏற்படுத்தும் படி 6 மாதத்திற்குள் மனுப் போடலாம். கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் செக்ஷன் 62 (1)ன் படி ரிஜிஸ்ட்ராரால் அங்கீகரிக்கப் பட்ட சங்கங்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகைகளை வசூல் செய்வது சம்பந்தமாகத்தான் இத்திருத்தச் சட்டம் பொருந்தும்.

## 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்.

### 3. சொந்தக் காடுகள் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.

Madras Preservation of Private Forests Amendment Act 1954 (3-2-1954) சொந்தக் காடுகளைப் பற்றிய 1949 ஆம் வருடத்திய 27-வது சட்டமானது 2-12-1954 வரை அமுலில் இருக்கும்படி அச்சட்டத்தின் முதல் செக்ஷன் திருத்தப்பட்டிருக்கிறது.

### 4 சென்னைக் கூட்டுறவுச் சங்க மறு அமைப்புச் சட்டம்.

State Co-operative Societies Reconstitution and Formation Act 1954. (4-2-1954.) ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டது காரணமாக முன்பு இருந்த சென்னை ராஜ்யக் கூட்டுறவுப் பாங்க் லிமிடெட், சென்னைக் கூட்டுறவு மத்திய நில அடமான பாங்க் லிமிடெட், சென்னை ராஜ்யக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் இவை மூன்றும் ஒரு அவசரச் சட்டத்தால் ஆந்திர ராஜ்யத்திற்குத் தனியாகவும் பிரிக்கப் பட்டன. அப்பிரிவினையால் ஏற்படுத்தப் பட்ட காரியங்களைச் சட்ட பூர்வமாகச் செய்யவும், அவை எல்லாம் பங்குதாரர்களையும் கடன் தாரர்களையும் கட்டுப்படுத்துவதாகச் செய்யவும் இச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

### 5, கடன் பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டம்.

Madras Indebted Agriculturists, Temporary Retief Act 1954. (6-2-1954.) இச் சட்டம் "வக்கீல்" 1954 பிப்ரவரி மாத இதழில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது.

### 6, தென் கன்னடம் சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம்.

The South Kanara Cultivating Tenants' Protection Act. (27-2-1954.) தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள குத்தகைதாரர்களை ஒரு வருடம் வரை அப்புறப் படுத்தாமலிருக்கச் சட்டம்.

### 7. மலையாளக் குடிவாரச் சட்டத் திருத்தம்.

Malabar Tenancy Amendment Act-1954. மலையாளக் குடிவாரச் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யப் பட்டிருக்கின்றன.


உ

ஸ்ரீ மகாலக்ஷ்மி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்குச் சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.

டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

# விற்பனை வரி விதிகள் திருத்தம்.

**வரிகள்**

## கையினால் நூற்கப்பட்ட நூலில் மட்டில் வியாபாரம் செய்பவர்களுக்குக் கட்டணமில்லாமல் லைசென்சு.

விற்பனை வரி விதி 6 (4) ன் படி—கையினால் நூற்கப்பட்ட நூல் வியாபாரிகளுக்கு லைசென்சு கொடுக்கக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. அதாவது ரூ. 10000க்கு மேல் ரூ. 20000க்கு அதிகப்படாத வியாபாரமுள்ளவர்களுக்கு ரூ 75 ம் அதற்கு மேல் லக்ஷ ரூபாய் வரை வியாபாரமுள்ளவர்களுக்கு ரூ 150 ம் அதற்கு மேல் ஒவ்வொரு லக்ஷ ரூபாய் வியாபாரத்திற்கும் ரூ 100 வீதம் அதிகக் கட்டணமும் கட்டி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். இவ் வியாபாரிகள் லைசென்சு வாங்கிக் கொண்டுவிட்டால் அவர்கள் விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை என்று இருந்தது. இப்போது இவ்வித வியாபாரிகள் கையினால் நூற்கப்பட்ட நூலில் மட்டில் வியாபாரம் செய்தால், அவர்கள் யாதொரு கட்டணமுமில்லாமலே லைசென்சு வாங்கிக் கொள்ளலாமென்று விற்பனை வரி வி தி 6 (4) (b) ல் ஒரு ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது.

## "கையினால் நூற்கப்பட்ட நூலில் மட்டில் வியாபாரம் செய்பவர்கள்" என்றால் யார்?

"கையினால் நூற்கப்பட்ட நூலில் மட்டில் வியாபாரம் செய்யும் வியாபாரி" (Person dealing exclusively in hand spun yarn) என்றால் யாரைக் குறிப்பிடுமென்று விற்பனை வரி விதி 4 (2) இப்போது ஒரு விளக்கம் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது நூல் சம்பந்தப்பட்ட வரையில் கையினால் நூற்கப்பட்ட நூலைத் தவிர வேறு விதமான நூலில் வியாபாரம் செய்யாமல் அவ் வியாபாரியானவர் வேறு சரக்குகளில் வியாபாரம் செய்தாலும் பாதகமில்லை; அவர் கையினால் நூற்கப்பட்ட நூர்கப்பட்ட நூலில் மட்டில் வியாபாரம் செய்பவராகப் பாவிக்கப் படுவார்-என்று விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வித வியாபாரிகள் புதிய விதிப்படி கட்டண மில்லாமலே லைசென்சு வாங்கிக் கொள்ளலாம். லைசென்சு வாங்கிக் கொண்டவர்களுக்கு விற்பனை வரி கிடையாது.

## இவர்கள் தாமதமாக லைசென்சுக்கு மனுப் போட்டால்

லைசென்சுக்கு எப்ரல் 30 தேதிக்குள் மனுப் போட வேண்டும். அப்படிப் போட்டால்தான் எப்ரல் முதல் தேதி முதல் லைசென்சு கொடுக்கப்படும். தாமதமாக லைசென்சு மனுப் போட்டால் மனுத் தேதி முதல் தான் சாதாரணமாக லைசென்சு கொடுக்கப்படும். இருந்தாலும் நியாயமான சந்தர்ப்பங்களில் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், கட்டணமில்லாமல் லைசென்சு வாங்கிக் கொள்ளக் கூடிய, கையினால் நூற்கப் பட்ட நூல் வியாபாரிகளும் கதர் ஜவுளி வியாபாரிகளும் தாமதமாக லைசென்சுக்கு மனுப் போட்டால், அவர்களிடம் ரூ 50 க்கு அதிகப்படாத அபராதத்தை வாங்கிக் கொண்டு எப்ரல் முதல் தேதி முதல் அமுலில் இருக்கும்படி அவர்களுக்கு லைசென்சு கொடுக்கலாமென்று விற்பனை வரி விதி 6 (3) (a) திருத்தப்பட்டிருக்கிறது.

## மாற்றப்படும் வியாபாரங்களுக்கு விற்பனை வரி கொடுக்கும் பொறுப்பு. புதிய வியாபாரி 30 நாட்களுக்குள் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும்:

விற்பனைவரி விதி 21 A என்று ஒரு புதிய விதி சேர்க்கப் பட்டிருக்கிறது. ஒரு வியாபாரி தம்முடைய வியாபாரத்தை வேறு ஒருவருக்கு அடியோடு மாற்றி விட்டால் அவர் கொடுக்க வேண்டிய விற்பனை வரி பாக்கியை வியாபாரத்தை மாற்றியவரிடமிருந்தும் வசூல் செய்து கொள்ளலாம்; புதிதாக வியாபாரத்தை ஏற்றுக் கொண்டவரிடமும் வசூல் செய்யலாம். ஆனால் புதிய வியாபாரியானவர் பெற்றுக் கொண்ட வியாபாரத்தின் மதிப்பு எவ்வளவோ அத் தொகைக்கு அதிகப் படாத விற்பனை வரி பாக்கிக்குத்தான் ஜவாப்தாரியாவார். புதிய வியாபாரி ஏற்றுக் கொண்ட தேதி முதல் நடக்கும் விற்பனைகளுக்கு அவர்தான் விற்பனை வரி கொடுக்க வேண்டும். புதிய வியாபாரியானவர் ஏற்கனவே தம்மைப் பதிவு செய்து கொண்ட

வியாபாரியாகவோ, லைசென்சு பெற்ற வியாபாரியாகவோ இருந்தாலொழிய, அவர் புதிதாக வியாபாரத்தை ஏற்றுக்கொண்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவு செய்து கொள்ளவோ அல்லது லைசென்சுக்கோ மனுப்போட வேண்டும்.

## கூட்டு வியாபாரங்கள், கம்பெனிகள் சங்கங்கள், இந்துக் குடும்ப வியாபாரங்கள் முதலியோர் 10-4-1954-க்குள் 'மானேஜர்' யார் என்பதை விற்பனை வரி அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

விற்பனை வரி விதி 22 A என்று ஒரு புதிய விதி சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதாவது:-விற்பனை வரிச்சட்டத்தின் செக்ஷன் 8Aன் படி தங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ள வேண்டிய அடியில் கண்ட வியாபாரிகள், அதாவது—பிரிப்படாத இந்து குடும்பங் கூட்டு வியாபாரங்கள், சங்கங்கள், கம்பெனிகள் அல்லது வேறு ஒருவருக்குக் கார்டியன் முறைமையிலோ, டிரஸ்டி முறைமையிலோ வியாபாரம் செய்பவர்கள்—இவர்கள் ஒவ்வொருவரும் இப்புதிய விதி அமுலுக்கு வந்த தேதியாகிய 10-3-54-லிருந்து ஒரு மாதத்திற்குள் அதாவது 10-4-1954 தேதிக்குள் புதிய நமூனா 16-ன்படி அவர்களுடைய "மானேஜர்" அல்லது நிர்வாகி யார் என்று பெயர் குறிப்பிட்டு விற்பனை வரி அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். விற்பனை வரிச் சட்டப்படி அனுப்பவேண்டிய 'ரிடர்ன்'களிலும் 'ஸ்டேட்மெண்ட்'களிலும் அந்த மானேஜரே கையெழுத்துச் செய்யலாம். அது அவ்வியாபாரியைக் கட்டுப் படுத்தும். புதிதாகப் பதிவு செய்து கொள்ளுகிறவர்கள் தங்களுடைய மொத்த வியபாரம் எந்த மாதம் ரூ. 7500 ஆகின்றதோ அதற்கு அடுத்த மாத முடிவுக்குள் தங்களை 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ள வேண்டுமென்று விதி 5A ல் இருக்கிறது. அவர்களும் நமூனா 19-ன்படி தங்களுடைய 'மானேஜர்' யார் என்பதை அதே கெடுவுக்குள் விற்பனை வரி அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த நமூனா 19ல கையெழுத்துப் போட்டு அனுப்ப வேண்டியவர்கள், இந்து குடும்ப வியாபாரங்களுக்கு அதன் தலைவரும, கூட்டு வியாபாரங்களுக்கு, அக்கூட்டில் பாதிப்பங்குக்குக் குறையாமல் பாத்தியமுள்ள கூட்டாளிகளும், சங்கங்களுக்கு அவற்றின் தலைவரும் காரியதரிசியும், சொந்தக் கம்பெனிகளுக்கு எல்லா டைரெக்டர்களும், பொதுக் கம்பெனிகளுக்கு மானேஜிங் ஏஜண்டுகளும் அல்லது மானேஜிங் டைரெக்டர்களுமாவார்கள்.

(10-3-1954 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I 104.)

## விற்பனை வரிச் சட்டம்—மொத்த வியாபார (டர்ன் ஓவர்) விதிகள் திருத்தம்.

விற்பனை வரி (Turnover and Assessment Rules) மொத்த வியாபார வரி விதிப்பு விதிகள் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவைகளாவன:—

(1) கையினால் நூற்கப்பட்ட நூல் வியாபாரிகளுக்கும், கையினால் நூற்கப்பட்ட நூலைக் கொண்டு கைத்தறியில் நெசவு செய்யப்பட்ட ஜவுளி வியாபாரிகளுக்கும் ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் ரூ. 6 கிடையாது. ரிஜிட்ரேஷனைப் புதுப்பிக்கவும் இவர்களுக்குக் கட்டணம் கிடையாது. டர்ன் ஓவர் விதி 5A (4) (16) ஷரத்துக்கள் மேற் கண்டபடி திருத்தப்பட்டிருக்கின்றன. இத்திருத்தம் 1-4-1953 தேதியிலிருந்து அமுலுக்கு வந்ததாகப் பாவிக்கப்படும்.

(2) பதிவு செய்து கொண்ட வியாபாரிகள் சரக்கு விற்பனை செய்யும்போது வாடிக்கைகாரர்களிடமிருந்து மார்ச்சு மாதம் 31தேதி முடிய வசூல் செய்யும் விற்பனை வரித்தொகைகள் ஜாடாவையும் அடுத்த எப்ரல் மாதம் 30 தேதிக்குள் சர்க்காரிடம் செலுத்தி விடவேண்டுமென்று டர்ன் ஓவர் விதி 5A(7) என்ற விதியில் இருக்கின்றது. இந்த விதியுடன் இப்போது அடியில் கண்ட ஷரத்து ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு வியாபாரியானவர் நடுவில் வியாபாரத்தை நிறுத்தி விட்டால் வியாபாரம் நிறுத்திய தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அவர் வசூல் செய்திருக்கும் விற்பனை வரித்தொகைகளைச் சர்க்காரிடம் கட்டி விடவேண்டுமென்று ஒரு ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கின்றது.

(3) வருடமத்தியில் வியாபாரத்தை நிறுத்தும் வியாபாரிகள், வியாபாரம் நிறுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் அதுவரை உள்ள கணக்குகளை A1 முனைப்படி விற்பனை வரி அதிகாரிக்கு அனுப்பி விடவேண்டும். விற்பனை வரி அதிகாரியும் அதே வருடத்திலேயே அவருக்கு வரி விதித்து விடலாம்.

(4) A. 3. நமூனைப்படி மாதா மாதம் கணக்கு அனுப்பும் வியாபாரிகளும் வருட மத்தியில் வியாபாரத்தை நிறுத்தி விட்டால், வியாபாரம் நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வியாபாரம் நிறுத்தப்பட்ட மாதக்கணக்கை அனுப்பி விடவேண்டும் என்று ஒரு புதிய ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## கொலை வழக்கு அப்பீலில், தீர்ப்பு எழுதிக் கையெழுத்திட்ட ஹைகோர்ட் உயர் நீதிபதி இறந்தார். இத்தீர்ப்பே செல்லாதென, சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்பு.

[ஆதாரம்:—1954 (1) மதராஸ் லா ஜர்னல் 51 சுப்ரீம் கோர்ட் உயர் நீதிபதிகள் முகர்ஜி விவியன் போஸ், பகவதி அவர்கள்]

சுரேந்திரன் மீதும் வேறு இரண்டு நபர்கள் மீதும் ஒரு கொலை வழக்கு நடந்தது. செஷன்ஸ் ஜட்ஜானவர் சுரேந்திரன் கொலை செய்ததாக அவருக்கு மரண தண்டனையும் மற்ற இருவர்களும் வேறு குற்றங்கள் செய்ததாகக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். தண்டனை அடைந்த மூன்று எதிரிகளும் அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அலகாபாத் ஹைகோர்ட்டின் ஒரு பகுதி அலகாபாத்திலும், மற்றொரு பகுதி லக்னோ என்ற லக்ஷ்மணபுரியிலும் நடக்கின்றன. இவ்வப்பீலானது லக்னோவில் விசாரிக்கப்பட்டது. அப்பீலை உயர் நீதிபதி கித்வாய் அவர்களும் உயர் நீதிபதி பார்கவா அவர்களும் சேர்ந்து 11-2-1952-ல் விசாரித்தனர். விசாரணை முடிந்தது. தீர்ப்புத்தான் பாக்கி. அதற்குள் நீதிபதி பார்கவா அவர்கள் அலகாபாத்துக்கு மாற்றப்பட்டார். அலகாபாத் போய் நீதிபதி பார்கவா அவர்கள் இவ்வழக்கின் தீர்ப்பை எழுதினர். இரண்டு உயர்நீதிபதிகளும் சேர்ந்து அளிக்கும் தீர்ப்பாகவே அதன் வாசகம் எழுதப்பட்டது. அத் தீர்ப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் சரி கடைசியிலும் சரி நீதிபதி பார்கவா அவர்கள் கையெழுத்திட்டனர். ஆனால் தேதி மட்டில் போடவில்லை. இத்தீர்ப்பை அவர் லக்னோவிலிருக்கும் மற்றொரு நீதிபதி கித்வாய் அவர்களுக்கு அனுப்பினர். ஆனால் நீதிபதி பார்கவா அவர்கள் 24-12-1952-ல் இறந்தார். அதன் பிறகு 5-1-1953-ல் தான் நீதிபதி கித்வாய் அவர்கள் இத் தீர்ப்பைக் கோர்ட்டில் வாசித்து அதில் தம்முடைய கையெழுத்தையும் போட்டார். இத்தீர்ப்பானது சுரேந்திரன் அடைந்த மரண தண்டனையையும் மற்ற எதிரிகள் அடைந்த தண்டனைகளையும் உறுதி செய்ததாக இருந்தது.

இத்தீர்ப்பின் பேரில் சுரேந்திரனும் மற்ற எதிரிகளும் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அப்பீலில் எழுந்த பிரச்னை ஒன்றே ஒன்று தான். அதாவது, வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவர் இறந்த பிறகு, கோர்ட்டில் வாசிக்கப்பட்ட இத்தீர்ப்பானது சட்டரீதியான ஒரு தீர்ப்பாகுமா என்ற பிரச்னை தான். இது 'தீர்ப்பே' அல்ல, இது செல்லாதென, சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர்.

ஒரு வழக்கில் "தீர்ப்புச் சொல்லுவது" (Delivery of Judgment) என்பது சடங்கு போன்ற ஒரு பிரமாதமான விஷயம். ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை அவ்வழக்கில் ஏற்படும் தீர்ப்புத் தான் எவ்வளவோ வகைகளில் பாதிக்கக் கூடியதாகும். அதுவும், கிரிமினல் வழக்கு ஒன்றில் ஏற்படும் தீர்ப்புத்தான். அவ்வழக்கில் எதிரியாக இருப்பவர் சுதந்தர மனிதனா அல்லது சிறைவாசம் செய்ய வேண்டியவரா என்பதை நிர்ணயம் செய்கின்றது. சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்குத் தண்டனைக் காலமானது தீர்ப்பு அளிக்கப்பட நிமிஷத்திலிருந்தே கணக்குச் செய்யப்பட வேண்டும். அதனால் தான் நீதிபதிகள் எப்படித் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்பதைப்பற்றிச் சாங்கோபாங்கமான விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன.

இவ்விதிகளின்படி ஒரு வழக்கை விசாரணை செய்த நீதிமன்றத்தின் "தீர்ப்பு" என்பது நீதிபதிகளின் முடிவான அபிப்பிராயத்தை அவ்வழக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கும் சரி, பொதுமக்களுக்கும் சரி, அறிவிக்கும் விதம், பகிரங்கமான நீதிஸ்தலத்தில் நீதிபதிகளால் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யும் ஒரு முறையாகும். தீர்ப்புச் சொல்லுவது என்பது நீதிபதிகள் செய்ய வேண்டிய ஒரு முக்கிய செய்கையாகும். பகிரங்கமான நீதி ஸ்தலத்தில் (Open Court) நீதிபதிகள் தங்களுடைய முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டியது தான் இச்சடங்கின் பிரதான அம்சமாகும். ஆகையால் ஒரு "தீர்ப்பு" என்பது இவ்விதம் கோர்ட்டில் பகிரங்கமாக அளிக்கப்படும் நேரத்தில், அவ்வழக்கை விசாரித்த அந் நீதிபதிகள் கொண்டிருக்கும் முடிவான அபிப்பிராயமாகும். இது மிக முக்கியம். ஒரு வழக்கின் விசாரணையானது முடிந்த பிறகு 'தீர்ப்பு' அளிக்கப்படுவதற்கு முன், அந்நீதிபதிகளின் மனதில் தோன்றியதெல்லாம் 'தீர்ப்பு' அல்ல. இரண்டு அல்லது பல நீதிபதிகள் சேர்ந்து விசாரித்த வழக்கைப் பற்றி அவர்களே ஒருவருக்கொருவர் விவாதம் செய்து கொள்ளலாம். தாற்காலிகமான அபிப்பிராயத்தை ஒவ்வொருவரும் மனதில் வைத்துக் கொண்டிருக்கலாம். இவற்றை அவர்கள் மாற்றிக் கொள்ளலாம். தீர்ப்புகளுக்கு ஒரு நீதிபதி நகல் எழுதித் தம்முடைய தாற்காலிக அபிப்பிராயத்தைத் தம்முடைய கையெழுத்துடன் மற்ற நீதிபதிகளுக்குத் தெரிவிக்கலாம். இவை எல்லாம் 'தீர்ப்பு' அல்ல. ஏனென்றால் கோர்ட்டில் பகிரங்கமாகத் தீர்ப்பு அளிக்கப்படும் நேரம் வரையில் ஒரு நீதிபதியானவர் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள உரிமை உள்ளவராவார். இரண்டு நீதிபதிகள் சேர்ந்து ஒரே அபிப்பிராயமாக இருந்து ஒரு நகல் தீர்ப்பு எழுதி, அதை ஒரு நீதிபதி மட்டில் பகிரங்கமான கோர்ட்டில் வாசிப்பதாக இருந்தாலும் அந்த நிமிஷம் வரை தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் உரிமை இரண்டு நீதிபதிகளுக்கும் உண்டு. ஆகையால் நகல் தீர்ப்பு எழுதிய நீதிபதி உயிருடனிருந்தால் தான் இவ்விதம் செய்ய முடியும். நீதிபதியே இறந்து போய் விட்டதால் இவ்விதம் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளச் சந்தர்ப்பமும் மறைந்து போகின்றது. நகல் தீர்ப்பு எழுதிய நீதிபதியானவர் உயிருடனிருந்தாலும் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளமாட்டார் என்று யாரால் ஊகிக்க முடியும்? ஆகையால் நீதிபதி பார்கவா அவர்கள் எழுதியனுப்பிய அபிப்பிராயமானது அவருடைய தார்காலிக அபிப்பிராயமே. இது சட்ட பூர்வமான 'தீர்ப்பு' அல்ல. சட்ட பூர்வமாகப் பகிரங்க நீதி மன்றத்தில் அவருடைய அபிப்பிராயமானது வேறு நீதிபதி அவர்களால் வாசிக்கப்பட்ட போது, அதை எழுதிய நீதிபதி அவர்களால் வாசிக்கப் பட்ட போது, அதை எழுதிய நீதிபதி பார்கவா உயிருடனில்லை. ஆகையால் அன்று கோர்ட்டில் வாசிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் சட்ட பூர்வமான 'தீர்ப்பு' ஆகாது என்று சுப்ரீம் கோர்ட்டார் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டு வழக்கை மறுபடியும் விசாரித்து, சட்ட பூர்வமான தீர்ப்பளிக்கும்படி அவ்வழக்கானது ஹைகோர்ட்டுக்குத் திருப்ப அனுப்பபட்டது.

## பஸ்ஸில் இடம் இருக்கும்போது கண்டக்டர் ஒரு பிரயாணியை ஏற்றிக் கொள்ள மறுக்கலாமா?

மோட்டார்ச் சட்ட விதி 218 (ii) என்ற ஷரத்தின்படி கட்டணம் கொடுக்கத் தயாராக இருக்கும் ஒரு பிரயாணியை பஸ்ஸில் ஏற்றுக் கொள்ளத் தகுந்த காரணமின்றி, கண்டக்டர் மறுக்கக்கூடாது.

பஸ்ஸில் இடம் இல்லாவிட்டால் சரி; இடம் இருக்கும்போது, பஸ் கட்டணம் கொடுக்கத் தயாராக இருக்கும் பிரயாணியை ஏற்றிக்கொள்ள முடியாதென்று ஒரு கண்டக்டர் மறுத்தார். கண்டக்டர் மீது இதற்காகச் சர்க்கார் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். அப் பஸ்ஸில் அந்த இடத்தை வேறு ஒரு பிரயாணிக்காக முன்னதாகவே தாம் ஒதுக்கி வைத்திருப்பதாக ('ரிசர்வ்' செய்திருப்பதாக) கண்டக்டர் கட்சி சொன்னார். இவ்விதம் 'ரிசர்வ்' செய்வதைத் தடுத்து மோட்டார்ச் சட்டத்தில் யாதொரு விதியும் இல்லை என்றும், கண்டக்டர் இக் கட்சியைச் சொல்ல உரிமை உண்டென்றும் உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். (Crl. R. C 376 of 1953 தீர்ப்புத் தேதி 22—1—1954.)

## விற்பனை வரிக்கு விற்பனை வரி விதிப்பது செல்லாது. சென்னை ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு

187730
-600 008

சென்னைப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் படி பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொண்ட வியாபாரிகள், தங்களிடம் சரக்கு வாங்குபவர்களிடம், தாங்கள் அவ் விற்பனைக்குச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய விற்பனை வரியை வசூல் செய்ய உரிமை உள்ளவர்கள். சரக்கின் விலையுடன் இவ் விற்பனை வரித் தொகையையும் சேர்த்து வியாபாரிகள் வாடிக்கைக்காரர்களிடம் வசூல் செய்கின்றனர். இம் மொத்தத் தொகையையே அவ் வியாபாரியின் 'டர்ன் ஓவர்' அதாவது மொத்த வியாபாரத் தொகையாகப் பாவிக்கப்பட்டு அதன் மீது விற்பனை வரி அதிகாரிகள் விற்பனை வரி விதித்து வந்தனர். அப்படிச் செய்வதால் வியாபாரி விற்கும் சரக்கின் விலை தவிர, அவ் வியாபாரி வசூல் செய்யும் விற்பனை வரித் தொகை மீதும் விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. இது சரி அல்ல என்று சென்னை ஹைகோர்ட்டார் சமீபத்தில் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். இனி வியாபாரியின் மொத்த விற்பனைத் தொகை (டர்ன் ஓவர்) கணக்குச் செய்யப்படும் போது, அவ் வியாபாரியானவர் தம்முடைய வாடிக்கைக்காரர்களிடமிருந்து வசூல் செய்திருக்கும் விற்பனை வரித் தொகையானது சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. இவ் விஷயமாகச் சிவில் கோர்ட்டுகளிலும் டிரிபுனலிலும் பல தீர்ப்புக்கள் ஏற்பட்டிருந்தாலும், ஹைகோர்ட்டால் அளிக்கப்பட்டிருக்கும் இத் தீர்ப்பானது எல்லா விற்பனை அதிகாரிகளையும் எல்லாக் கீழ் கோர்ட்டுக்களையும் கட்டுப்படுத்தக் கூடியது. (உயர் நீதிபதிகள் சத்தியநாராயண ராவ் அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்களும் 7—1—1954ல் C. R. P. No. 1413 of 1952 என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு.)

## மோட்டார் பஸ் கம்பெனியார் பழைய மோட்டார்களை விற்ருல், அதற்கு விற்பனை வரி உண்டா?

ஒரு மோட்டார் போக்கு வரத்துக் கம்பெனியார் தங்களுடைய பழைய பஸ்களையும், உபயோகிக்க முடியாத மோட்டார்களையும் விற்று வந்தார்கள். இவர்களுக்கு மோட்டார் 'பஸ் சர்விஸ்' 'லாரி சர்விஸ்' போன்ற தொழிலே ஒழிய, மோட்டார் விற்பனை செய்யும் தொழில் அல்ல. இக் கம்பெனியார் மோட்டார் வியாபாரிகளாக மாட்டார்களென்றும், வியாபாரி அல்லாத இக் கம்பெனியார் செய்யும் மோட்டார் விற்பனைகளுக்கு விற்பனை வரிச் சட்டப்படி விற்பனை வரி விதிக்க முடியாதெனவும் சென்னை ஹைகோர்ட்டார் சமீபத்தில் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். (சென்னை உயர் நீதிபதி சத்திய நாராயண ராவ் அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்களும் C.R.P. No. 1948 of 1952 நம்பரில் 7—1—1954ல் அளித்த தீர்ப்பு.)

## கரும்புப் பயிர் செய்யும் விவசாயி கரும்பை வெல்லமாக மாற்றி விற்ருல் விற்பனைவரி உண்டா?

விற்பனைவரிச் சட்டத்தின் செக்ஷன் (I2) ஷரத்தின்படி ஒருவர் தமக்குப் பாத்தியமுள்ள நிலத்தில் பயிர்செய்யும் விவசாயப் பொருள்களையோ, தோட்டப் பயிர்களையோ விற்பனை செய்தால் அதற்கு விற்பனைவரி கிடையாது. ஒருவர் தம்முடைய நிலத்தில் தம்மால் பயிர் செய்யப்பட்ட கரும்பைக் கருப்பங் கழிகளாகவே மார்கெட்டில் விற்று வந்தார். இதற்கு விற்பனை வரி கிடையாது. ஒருவருடத்தில் அவர் கரும்பாக விற்காமல், அதை வெல்லமாக மாற்றி விற்பனை செய்தார். இவர் விற்பனைவரிச் சட்டப்படி ஒரு 'வியாபாரி' ஆவார் என்றும், விவசாயப் பண்டங்களை வேறுசரக்காக மாற்றி விற்பனை செய்ததால் விற்பனைவரி கொடுக்க வேண்டுமென்று சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பு அளித்திருக்கின்றனர். (உயர்நிதிபதி சத்திய நாராயண ராவ் அவர்களும் உயர்நிதிபதி ராஜகோபாலன் அவர்களும் 12-1-1594ல் T. R. C. No. 75 of 1953 என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு.)

# சென்னை இந்துமத-தர்மபரிபாலனச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லா. ஷிரூர் மடாதிபதியின் வழக்கு அப்பிலில் சுப்ரீம்கோர்ட்டாரின் தீர்ப்பு.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டமென வழங்கும் 1951-ம் வருடத்திய சென்னை இந்துமத-தர்மபரிபாலனச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லாவென ஷிரூர் மடாதிபதியின் வழக்கில் சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பு அளித்திருந்தனர். அத்தீர்ப்பின் பேரில் சென்னை சர்க்கார் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தனர். சுப்ரீம் கோர்ட்டார் 16-3-1954ல் தீர்ப்பளித்தனர்.

தென்கன்னடம் ஜில்லாவிலுள்ள ஷிரூர் மடத்திற்கு ஒரு 'ஸ்கீம்' எற்படுத்த வேண்டுமென்று 'எண்டௌமெண்டுபோர்டார்' நடவடிக்கைகள் எடுத்ததன் பேரில், அதைத் தடுக்கவே அம் மடாதிபதியானவர் சென்னை ஹைகோர்ட்டுக்கு ஒரு 'ரிட்' மனுக் கொடுத்தார். அவ்வித நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் கொடுக்கும் சென்னை அறநிலையப்பாதுகாப்புச் சட்டஷரத்துக்கள் சில செல்லாவெனவும், அச்சட்ட ஷரத்துக்களை ஒட்டி நடவடிக்கைகள் எடுக்க எண்டௌமெண்டு போர்டாருக்கு அதிகாரமில்லை என்றும் சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்திருந்தனர். அத் தீர்ப்பின் பேரில்தான் சென்னை சர்க்கார் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தனர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொத்துச் சுதந்தரம், மதச்சுதந்தரம் இவை பற்றிய ஜீவாதார உரிமைகளை அளிக்கும் ஆர்டிகிள் 19 (1) (F); ஆர்டிகிள் 25 ஆர்டிகிள் 29 இந்த ஷரத்துக்களுக்குச் சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் அடியில்கண்ட ஷரத்துக்கள் முரணாக இருப்பதால் அவை செல்லா என சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பளித்திருக்கின்றனர். இத்தீர்ப்பின்படி ஷிரூர் மடாதிபதியையும் அவரைப் போலுள்ள மற்ற மடாதிபதிகளையும் கீழேகண்ட சென்னைச் சட்ட ஷரத்துக்கள் கட்டுப்படுத்தமாட்டா.

அவையாவன :—கமிஷனர், டிப்டி கமிஷனர், உதவி கமிஷனர் இவர்களும் இவர்களிடம் அதிகாரம் பெற்றவர்களும் எவ்வித மதஸ்தாபனத்திற்குள்ளும் சென்று தங்கள் அதிகாரத்தைச் செலுத்தலாமென்று சொல்லும் செக்ஷன் 21; மடாதிபதிகள் சிலவகைச் செலவுகள் செய்ய, கமிஷனருடைய அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் செக்ஷன் 30(2); உபரி வருமானத்தைச் செலவு செய்ய டிப்டி கமிஷனருடைய அனுமதி வேண்டுமென்ற செக்ஷன் 31; மடாதிபதிகள் தங்களுக்கு வரும் பாத காணிக்கையைப்பற்றி வரவு செலவுக் கணக்குகள் வைத்துக் கொண்டு அவற்றைக் கமிஷனர் கேட்கும்போது தாகல் செய்யவேண்டுமென்று கட்டளையிடும் செக்ஷன் 55; மடங்களின் லௌகிக விஷயங்களை நிர்வாகம் செய்ய ஒரு மானேஜர் நியமிக்கக் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கும் செக்ஷன் 56; மதஸ்தாபனங்களை நிர்வாக உத்தியோகஸ்தர் மூலம் நிர்வாகம் செய்வதாக அறிக்கையிடலாமென்று கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கும் 63 முதல் 69 வரை உள்ள செக்ஷன்கள். இந்த ஷரத்துக்கள் தவிர எல்லா மதஸ்தாபனங்களும் வருமானத்தின் பேரில் 5 சதவிகிதத்திற்கு மேற்படாத ஒரு வரியைச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்று வரிவிதிக்கும் செக்ஷன் 76-என்ற ஷரத்தை இயற்றச் சென்னைச் சட்டசபைக்கு அதிகாரமில்லை எனவும் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டுத் தீர்ப்பளித்திருக்கின்றனர்.


குணமில்லையென்று நிரூபிப்பவருக்கு மருந்து தொகையுடன் ரூ. 100 இனாம்.

## இளம்பிள்ளை வாதம்

நீடித்ததற்கும் உத்தரவாத சிகிச்சை

இளம்பிள்ளை வாதம்-பட்சவாதம் ஒன்றே

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 25

குஷ்டம்:-கண் சிவந்திருத்தல், மூக்கு நிறந் திருத்தல், அதிக வியர்வை இவைகள் இல்லாதது சிகிச்சைக்கு உத்தரவாதம்.

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 20.

யானைக்கால்:-சதை கெட்டிப்படாது தளதளப்போடு சுமார் 3 வருடத்திற்கு மேற்படாதது சிகிச்சைக்கு உத்தரவாதம்.

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 15.

உபயோகிக்கும் முறை மருந்துடன் நற்சாட்சி தேவைக்கு, சுமார் 25 வருஷம் அனுபவம். ஆர்டருடன் அட்வான்ஸ் ரூ. 2. தேவை. வெளிநாடுகளுக்கு மருந்துக்கு முன்பணமும் தபால் சார்ஜ் ரூ. 2 ம் சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

M. R. ராஜகோபால் பிள்ளை R.M.P.
மன்னப்பிள்ளைத் தெரு, மன்னார்குடி

சென்ற இதழ் தொடர்ச்சி.




# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

## கண்களின் பாதுகாப்பு

செக்ஷன் 35
விதி 58

கண்களில் பொறி அல்லது தூள் தெறிக்கும் படியோ, அல்லது அதிக பிரகாசமாக இருப்பதாலோ அதில் வேலை செய்யும் தொழிலாளர்களின் கண்களுக்குக் கெடுதி விளைவிக்கக்கூடிய சில தொழில்களில் அத்தொழிலாளர்களுக்குக் கெடுதி நேரிடாதபடி அவர்களுக்குத் தகுந்த மூக்குக்கண்ணாடி (Goggles) அல்லது மறைப்பு முதலிய பாதுகாப்புக்கள் கொடுக்கவேண்டும். எந்த எந்தத் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இவ்விதம் மூக்குக் கண்ணாடி அல்லது வேறு கண் பாதுகாப்புக்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று விதி 58ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. உலோகங்களில் பொறி தெறிக்கும்படியான வேலைகள், வெல்டிங், ஜல்லி உடைத்தல், கண்ணாடி உருக்குவேலைகள் முதலிய வேலைகளில் மேற்கண்ட விதி அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

## அபாயகரமான புகை இருக்கும் அறைகள்

செக்ஷன் 36
விதி 59

எந்தத் தொழிற்சாலையிலும் மூச்சு அடைக்கும்படி அபாயகரமான புகை அடைந்திருக்கக் கூடிய எவ்வித அறை குட்டை, குழி, குழாய்கள் முதலிய இடங்களுக்குள்ளிருந்து வெளியே தப்பி ஓடிவர ஓட்டை அல்லது வேறு வசதிகள் இருந்தாலொழிய அவ்விடங்களில் எவரும் நுழையக் கூடாது; நுழைய அனுமதிக்கப்படவும் கூடாது. அந்த இடங்களுக்குள் 24 வோல்டக்கு அதிகமான வோல்ட்டேஜ் உள்ள போர்டபிள் எலெக்ட்ரிக் லைட்டுகளையோ வேறு விளக்குகளையோ எவரும் கொண்டுபோகக் கூடாது. அந்த இடங்களுக்குள் ஒருவர் போகவேண்டியிருந்தால் முதலில் அங்கிருக்கும் புகையை அப்புறப்படுத்த வேண்டும். மறுபடியும் புகை போகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். இதைப் பரீட்சை செய்ய யோக்கியதாம்சமுள்ள ஒருவர் தாமே அந்த அறைக்குள் சென்று அங்கே அபாயகரமான புகை எதுவுமில்லை என்றும், எந்தத் தொழிலாளரும் உள்ளே நுழையலாமென்றும் ஒரு சர்டிபிகேட் கொடுக்கவேண்டும். மேலும் உள்ளே நுழையும் தொழிலாளர் மூச்சு விடத் தேவையான சாதனங்களுடன் இருக்கவேண்டும். அவருடைய பில்ட்டில் ஒரு அழுத்தமான கயிறு கட்டப்பட்டு அக்கயிற்றின் மற்றொரு நுனி வெளியே இருக்கும் ஒருவரால் பிடித்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். இவ்விதப் புகை அறைகள் இருக்கும் தொழிற்சாலைகளில் மூச்சு விடும் சாதனங்களும், மறுபடி மூச்சுக்கொண்டு வரக் கூடிய சாதனங்களும், பில்ட்கள், கயிறுகள் இவைகள் எப்பொழுதும் தயாராக வைக்கப் பட்டிருக்கவேண்டும். இவை அடிக்கடி சோதனை செய்யப்பட்டிருக்கவேண்டும். தேவையான தொழிலாளர்களுக்கு முன் கூட்டியே இதில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கவேண்டும். புகை அறைகளிலிருந்து வெளியே ஓடிவர அமைக்கப்படும் ஓட்டைகள் 16 அங்குல நீளத்திற்கும் 12 அங்குல அகலத்திற்கும் அல்லது 16 அங்குலமுடைய மீட்டர் இருக்கவேண்டும்.

## தீ பிடித்துக்கொள்ளக் கூடிய தூசி புகை முதலியவை

**செக்ஷன் 37 விதி 60**

எந்தத் தொழிற்சாலைகளிலும் நடக்கும் வேலைகளில் உற்பத்தியாகும் தூள், தூசி, புகை, அனல் காற்று இவைகள் தீ பிடித்துக்கொண்டால் வெடிக்கும் சுபாவமுள்ளவையாக இருந்தால், அவ்வித வெடிப்பு ஏற்படாமலிருக்கத் தேவையான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். முக்கியமாக அந்த யந்திரங்கள் இருக்கும் இடங்கள் மூடப்பட்டிருக்கவேண்டும். தூள், தூசி, புகை, அனல், காற்று இவைகள் சேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்; சேர்ந்தவைகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அவைகளில் நெருப்புப் பிடிக்காத விதம் பார்த்துக் கொள்ளவேண்டும். வெடிப்பு ஏற்பட்டால் அதிக சேதம் நேராதபடிக்கும் அது பரவாமலிருப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். சில தொழில்களுக்கு விதி 60ல் விதி விலக்குகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

## தீ பிடித்தால், முன் ஜாக்கிரதை

**செக்ஷன் 38 விதி 61**

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலை செய்யும் தொழிலாளர்கள் தீ விபத்து நேரும் காலங்களில் தப்பிக்கொள்ளப் போதுமான வசதிகள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். சுருக்குக் கதவாக இருந்தாலொழிய, கதவுகள் எல்லாம் வெளியே திறக்கும்படி இருக்கவேண்டும். சாதாரணமாக உபயோகத்திலிருக்கும் வழிகளைத் தவிர தீ விபத்துக் காலங்களில் வெளியே போக உதவக்கூடிய எல்லா ஜன்னல்களும் கதவுகளும் அடையாளம் தெரியும்படி குறிப்புகளுடன் இருக்க வேண்டும்.

தீ விபத்து நேரும்போது எல்லாத் தொழிலாளர்களுக்கும் காது கேட்கும்படி எச்சரிக்கை செய்ய முன் ஏற்பாடுகள் செய்திருக்கவேண்டும். சாதாரணமாய் 20 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் மாடிகளில் வேலை செய்பவர்களுக்கும், தீ பிடிக்கக் கூடிய சாமான்கள் உபயோகப்படுத்தியோ சேகரித்து வைத்தோ இருக்கும் இடங்களில் வேலை செய்பவர்களுக்கும், தீ விபத்து ஏற்படும் காலங்களில் எப்படித் தப்பிக் கொள்வதென்று முன் கூட்டியே பயிற்சி கொடுத்திருக்கவேண்டும்.

தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொரு அறையிலும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி தீ பிடித்த காலங்களில் எவ்விதத் தடங்கலுமில்லாமல் வெளியே தப்பித்துக் கொள்வதற்குப் போதுமான வாயிற்படிகள் இருக்கவேண்டும். இவ்வாசல் ஒவ்வொன்றும் 6 அடி உயரத்துக்குக் குறையாமலும் 4 அடி அகலத்துக்குக் குறையாமலும் இருக்கவேண்டும். மாடியுள்ள தொழிற்சாலைகளில் ஒரே சமயத்தில் 20 தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலை செய்துகொண்டிருந்தால், மாடியிலிருந்து கீழே எவ்விதத் தடங்கலுமில்லாமல் வெளியே வருவதற்காக சாசுவதமாகக் கட்டப்பட்ட ஒரு படிக்கட்டாவது இருக்க வேண்டும். மாடிகளில் ஒரே சமயத்தில் குறைந்தது 20 தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளிலும், பூமிக்குக் கீழே உள்ள அறைகளில் வேலை செய்யும் தொழிற்சாலைகளிலும், நெருப்புப் பிடித்துக் கொள்ளக் கூடிய சரக்குகள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளிலும் எவ்வித தடங்கலுமின்றி வெளியே வர, குறைந்தது இரண்டு படிக்கட்டுக்களாவது சாசுவதமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். படிக்கட்டுகளின் பக்கங்கள் திறந்திருந்தால் கைப்பிடிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். தவிர, 1-4-1949க்குப் பின் கட்டப்படும் தொழிற்சாலைகளிலும், தொழிற்சாலையாக உபயோகிக்கப்படும் கட்டடங்களிலும் குறைந்தது ஒரு படிக்கட்டாவது நெருப்புப் பிடித்துக் கொள்ள முடியாத கல் காங்கிரீட், அஸ்பெஸ்டாஸ், இரும்பு, அல்லது சீப் இன்ஸ்பெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட சாமான்களால் கட்டப்பட்டிருக்கவேண்டும். வழிகளும் அதன் கதவுகளும் அவ்விதமாகவே கட்டப்பட்டிருக்க வேண்டும். படிக்கட்டு 45 டிக்ரிக்குமேல் செங்குத்தாக இருக்கக் கூடாது. தொழிற்சாலையின் எந்த இடம் படிக்கட்டிலிருந்து 150 அடிக்கு அப்பால் இருக்கக்கூடாது. படிக்கட்டுகளின் அகலம் 45 அங்குலத்திற்குக் குறைவாக இருக்கக் கூடாது. நெருப்புக் குச்சிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குச் சில பிரத்தியேகமான விதிகள் விதி 61 (4)ல் இருக்கின்றன.

## குறைபாடுகள் இருக்கும் தொழிற்சாலைகளைப்பற்றி இன்ஸ்பெக்டரின் அதிகாரம்

**செக்ஷன் 39-40**

ஒரு தொழிற்சாலையின் கட்டடமோ, அதன் பாகமோ, அங்கே இருக்கும் யந்திரங்களோ மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகவோ, பந்தோபஸ்துக் குறைவாகவோ இருப்பதாகத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினால்—அவர் தொழிற்சாலை

பின் மானேஜருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பி, குறிப்பிட்ட கெடுவுக்குள் அதில் கண்டபடி ஒரு பிளான் தயார்செய்து அனுப்பும்படி உத்தரவிடலாம். அல்லது உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைகளைச் செய்து பார்த்து அதிலிருந்து ஏற்படும் விஷயங்களைத் தமக்குத் தெரிவிக்கும்படி உத்தரவிடலாம். அல்லது குறிப்பிட்ட கெடுவுக்குள் என்ன செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடலாம். அபாயம் உடனே ஏற்படக் கூடியதாக இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினல், அது சரியாகப் பழுது பார்த்து மாற்றப்படும் வரையில் அந்த இடங்களை உபயோகப்படுத்தக் கூடாதென்றும் தடை செய்யவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு.

## வசதிகள்

செக்ஷன் 42 விதி 62

கழுவ வசதிகள்:—ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் கழுவிக் கொள்ளத் தகுந்ததும், போதுமானதுமான வசதிகள் செய்யப்பட்டும், எப்பொழுதும் வைக்கப்பட்டும் இருக்க வேண்டும். இவ்வசதிகள் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும், வெளியில் தெரியாமல் இருக்கும் வண்ணமும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் இவைகள் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதுடன், சுலபமாக உபயோகித்துக் கொள்ளக்கூடிய விதம் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

விதி 62

குறிப்பிட்ட தொழிற்சாலைகளிலோ குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தொழிற்சாலைகளிலோ இவ்வசதிகள் எவ்விதம் எந்த அளவுக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று விதிகள் ஏற்படுத்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை அனுசரித்துச் செய்யப்பட்டிருக்கும் விதி 62 எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் 1-1-1952 முதல் பொருந்தும். இவ்விதியின்படி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்கள் கழுவிக் கொள்ள, சோப்பும், நகம் சுத்தம் செய்யும் புருஷ்கள் அல்லது வேறு விதமான சுத்தம் செய்யும் சாதனங்கள் யாவருக்கும் கிடைக்கும்படி சுத்தமாகவும் ஏற்பாடாகவும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இது தவிர—தண்ணீர் தொட்டிகளிலிருந்தோ பைப்களிலிருந்தோ தண்ணீர் எடுக்க இன்ஸ்பெக்டருடைய அங்கீகாரப்படி போதுமான குழாய்கள் (டாப்) அமைக்கப்பட வேண்டும். தேகத்திற்குக் கெடுதி விளைவிக்கும் சாமான்களைக் கொண்டோ அசிங்கமான சாமான்களைக் கொண்டோ வேலை செய்யவேண்டிய 15 தொழிலாளர்களுக்கு ஒரு குழாய் வீதமாவது இருக்கவேண்டும். அவ்விதமான வேலை இல்லாத தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் 20 தொழிலாளர்களுக்குள் இருந்தால் 1 குழாயும், அதற்குமேல் 35 தொழிலாளர்கள் வரை இருந்தால் 2 குழாய்களும், 50 தொழிலாளர்கள் வரை இருந்தால் 3 குழாய்களும் 150 தொழிலாளர்கள் வரை இருந்தால் 4 குழாய்களும் 200 தொழிலாளர் வரை இருந்தால் 5 குழாய்களுமாவது இருக்க வேண்டும். 200க்கு மேல் 500 வரை தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் 50 தொழிலாளர்களுக்கு ஒரு குழாய் வீதமும் அத்துடன் கூட ஒரு 5 குழாய்களும் இருக்க வேண்டும். 500 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் 100 தொழிலாளர்களுக்கு ஒரு குழாய் வீதமும் அத்துடன் கூட 11 குழாய்களும் இருக்கவேண்டும். பெண்களுக்குக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளத் தனியாக வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பெண்களுக்கு 'மட்டில்' என்று தாய்பாஷையில் நோட்டீஸ் போடப்பட்டிருப்பதுடன் அந்த இடங்கள் ஆண்கள் வேலை செய்யும் இடங்களிலிருந்தும் ஆண்கள் நடமாடும் இடங்களிலிருந்தும் தெரியாதபடி மறைக்கப்பட்டிருக்கவேண்டும். தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தது 6 காலன் வீதம் தண்ணீர் கிடைக்கும்படி போதுமான வசதிகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஹெல்த் ஆபீசர் அங்கீகாரம் செய்யப்படும் இடத்திலிருந்து எடுக்கும் தண்ணீர்தான் உபயோகப்படுத்தப்படவேண்டும். மேற்கண்ட அளவுக்குத் தண்ணீர் கிடைப்பது சாத்தியமல்ல என்று சீப் இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினல் அவர் விதி விலக்கு அளிக்கலாம். எப்படியும் ஒரு தொழிலாளருக்கு ஒரு காலன் வீதமாகவாவது தண்ணீர் கிடைக்கும்படிதான் அவர் விதி விலக்கு அளிக்கமுடியும்.

## ஆடைகளை வைத்துக்கொள்ளவும் உலர்த்தவும் வசதி

செக்ஷன் 43

குறிப்பிட்ட தொழிற்சாலைகளிலோ குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தொழிற்சாலைகளிலோ தொழிலாளர்கள் வேலை செய்யும்போது உடுத்திக் கொள்ளாத உடைகளை வைத்துக்கொள்ளவும், நனைந்த உடைகளை உலர்த்தவும் எவ்வித வசதிகள் செய்யப்படவேண்டுமென்று விதிகள் ஏற்படுத்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

## உட்கார வசதிகள்

நின்றுகொண்டே வேலை செய்யவேண்டிய தொழிலாளர்கள், வேலை நேரங்களில் உட்கார சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது சற்று உட்கார்ந்து இளைப்பாற இஷ்டப்பட்டால் அவர்கள் உட்கார்ந்து கொள்ளத்தக்க ஏற்பாடுகள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் செய்யப்பட்டிருக்க வேண்டும். எந்தத் தொழிற்சாலையிலும் ஒரு குறிப்பிட்ட வேலையைத் தொழிலாளர்கள் உட்கார்ந்து கொண்டே சரிவரச் செய்யக் கூடுமென்று தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினால், அவர் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் உட்கார்ந்து வேலை செய்யும் வசதிகளைச் செய்து முடிக்கும்படி எந்தத் தொழிற்சாலை ஆட்சியாளருக்கும் எழுத்து மூலம் நோட்டீஸ் அனுப்பலாம். ஆனால் இவ்விதிகள் குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கோ குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தொழிற்சாலைகளுக்கோ பொருந்தாதென்று விதி விலக்கு அளிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

## முதற் சிகிச்சை—அவசர வைத்திய சாதனங்கள்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலை நேரங்களில் அவசர வைத்திய உதவி அல்லது முதற் சிகிச்சைக்குத் தேவையான சாமான்கள் அடங்கிய பெட்டி (First-aid boxes) தயாராக வைக்கப்பட்டிருக்கவேண்டும். வேலை செய்யும் ஒவ்வொரு 150 தொழிலாளர்களுக்குக் குறைந்தது ஒரு பெட்டியாவது இருக்கவேண்டும். பெட்டியில் என்ன என்ன சாமான்கள் வைக்கப்பட்டிருக்கவேண்டுமென்று விதி 63ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. இப்பெட்டிகள்மீது வெள்ளை பூசி அதற்குள் 'சிகப்பு கிராஸ்' (Red-Cross) அடையாளமிட்டு வைக்கப்பட்டிருக்கவேண்டும். இப்பெட்டிகளில் விதிகளின்படி வைக்கப்படவேண்டிய சாமான்களைத் தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது. மேலும் இவை அவசர முதற் சிகிச்சை செய்வதில் பயிற்சி பெற்ற ஒருவருடைய மேல்பார்வையில் இருக்கவேண்டும். அவர் வேலை நேரங்களில் எப்பொழுதும் தொழிற்சாலையிலேயே இருக்க வேண்டும். 500 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் வைத்திய வசதிகளுடன் ஒரு தனி அறை (Ambulance Room) ஒன்று இருப்பதுடன், ஒரு டாக்டரும், நர்சும் இருக்கவேண்டும்.

செக்ஷன் 45
விதி 63

(தொடரும்)

சுல்தானியா


படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ-சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி, எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12. சிறிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 6.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—
ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை, S. Ry.

சென்னையில் ஸ்டாக்கிஸ்ட்:—
E. A. N. அப்துல் லத்தீபு அன் கோ
1 & 2, அண்ணா பிள்ளை தெரு,
கோத்தவால்சாவடி; :: மதராஸ்—1

# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் ‘பதில்’ பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

## இந்துச் சட்டம்-முதல் மனைவி விவாக ரத்து செய்து கொள்ளலாமா?

46. **கேள்வி:** (சீனுவாஸன்—பொம்மிடி) ஒரு இந்து பிராமணர் அதே இனப் பெண்ணை மணந்தார். அம்முதல் மனைவியை அவளுடைய தாய் வீட்டிலேயே விட்டு விட்டு, 4 வருடங்களுக்குப் பிறகு, இரண்டாந்தாரம் செய்து கொண்டு, அவளுடன் வாழ்ந்து வருகிறார். இப்பொழுது முதல் மனைவிக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. முதல் மனைவிக்குச் சந்ததி இல்லை.

இப்பொழுது முதல் மனைவி விவாக ரத்துச் செய்து கொள்ள முடியுமா? திருமணச் செலவுகளையெல்லாம் கணவனிடமிருந்து பெற முடியுமா? முதல் மனைவி செலவுகளைப் பெற்றுக் கொண்டு இரண்டாம் திருமணம் செய்து கொள்ள முடியுமா? திருமணச் செலவுகளைப் பெற எத்தனை வருடங்களுக்குள் தாவாச் செய்து கொள்ள வேண்டும்?

**பதில்:** சென்னைப் பலதாரத் தடை விவாக ரத்துச் சட்டம் 22-3-1949ல் அமுலுக்கு வந்தது. இரண்டாவது திருமணம் அத்தேதிக்குப் பிறகு ஏற்பட்டிருந்தால் இரண்டாவது திருமணம் செல்லாது. அப்படியானால் அக்காரணத்தைக் கொண்டு முதல் மனைவி விவாக ரத்துக் கேட்க முடியாது. விவாக ரத்துக்கான சட்டத்தில் கண்டிருக்கும் வேறு காரணங்கள் இருந்தால் தான் முதல் மனைவி மனுப் போடலாம். இரண்டாவது திருமணமானது அச்சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்பே நடந்திருந்தால், முதல் மனைவி அக்காரணத்தைக் கொண்டே விவாக ரத்துக்கு மனுப்போடலாம். விவாகரத்துச் செய்து கொண்டு அவள் வேறு திருமணமும் செய்து கொள்ளலாம். ரத்தான விவாகத்தில் ஏற்பட்ட செலவுகளை வாபீஸ் வாங்கச் சட்டம் இடம் கொடுக்காது.

## விற்பனை வரிச் சட்டம் ஒவ்வொரு வருடமும் பதிவுக் கட்டணம் கட்ட வேண்டுமா?

47. **கேள்வி:** (பழனியப்ப செட்டியார்—திருவண்ணாமலை.) ஒரு வியாபாரி 1951-52 வருடத்திற்கு விற்பனை வரிச்சட்டப்படி ரூ. 6 கட்டிப் பதிவு செய்து கொண்டார். அந்த வருடம் ரூ. 10,000-க்கு மேல் விற்பனை இருந்தது. வரியும் கட்டி விட்டார். 1952-53 வருடத்திலும் ரூ. 6 கட்டி விட்டார். ஆனால்

வியாபாரம் ரூ. 5000 கூட இல்லை. விற்பனை வரி அதிகாரி கணக்கை ஒப்புக் கொள்ளாமல் ரூ. 10,000 வரி விதித்து, வரிகட்டி, வியாபாரி அப்பீல் செய்திருக்கிறார். டி வியாபாரி 1953, 1954, வருடத்திற்கும் ரூ. 6 கட்ட வேண்டுமா? அல்லது கட்டாது விட்டு விடலாமா?

பதில்: விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8A-படி ஒரு வருடத்தில் ரூ. 7500-க்குக் குறையாமல் மொத்த வியாபாரமுள்ள வியாபாரிகள் தங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ள வேண்டும். இதற்குக் கட்டணம் ரூ. 6. இப்பதிவானது ரத்துச் செய்யப்படும் வரையில் ஒவ்வொரு வருடமும் இப்பதிவுக் கட்டணம் கட்டிக் கொண்டுதான் வரவேண்டும். தொடர்ந்த இரண்டு வருடங்களுக்கு ஒவ்வொரு வருடத்திலும் ரூ. 7500க்குக் குறைவாகவே தான் வியாபாரம் நடந்ததாக விற்பனை வரி அதிகாரிக்குத் திருப்தியாகும் விதம் அவ்வியாபாரி ருசுப்பித்தால் தான், இப்பதிவான துரத்துச் செய்யப்படும். விற்பனை வரி விதிக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இப்பதிவு ரத்துச செய்யப்படும் வரை வருடா வருடம் இப்பதிவுக் கட்டணம் உண்டு. பதிவுக்கட்டணம் கட்டாமலிருப்பது குற்றமாகும். ஒரு வியாபாரியின் கணக்கை வரி அதிகாரி நம்புகிறாரா இல்லையா என்பது வேறு விஷயம். அது சட்டப்பிரச்னை அல்ல.

## இந்துத் தகப்பன் பூர்வீகச் சொத்தை இரண்டாவது மனைவிக்கு எழுதி வைக்கலாமா?

48. கேள்வி: (கந்தசாமி—கொழும்பு) இந்து ஒருவருக்கு அவருடைய தகப்பனால் சம்பாதிக்கப்பட்ட சொத்து இருக்கிறது. அவருடைய முதல் மனைவிக்கு ஒரு ஆண் மகன் உண்டு. அவர் இரண்டாவது மனைவி கலியாணம் செய்து கொள்ள அச்சொத்தை இரண்டாம் மனைவிக்கே எழுதி வைத்தார். இரண்டாம் மனைவிக்கும் ஒரு ஆண் மகன் உண்டு. சொத்தில் மூத்த மனைவியின் மகனுக்குப் பாத்தியம் உண்டா, இல்லையா?

பதில்: பிரிபடாத இந்தக் குடும்பத்தில், பூர்வீகச் சொத்தைத் தகப்பன் இரண்டாவது மனைவிக்கு எழுதி வைத்ததே செல்லாது. இச்சொத்தில் மூத்த மனைவியின் மகனுக்குப் பாத்தியம் உண்டு.

## கடன் ஒத்திவைப்புச் சட்டம் விவசாயி கொடுக்க வேண்டிய ஜவுளி பாக்கி

49. கேள்வி: (குமரசாமி—தஞ்சாவூர்) (1) விவசாயிகளுக்கு ஜவுளி கொடுத்ததில் பாக்கி ஏற்பட்டிருப்பதை வசூல் செய்வதற்குக் கோர்ட்டில் தாவா செய்யத் தாற்காலிகப் பரிகாரச் சட்டத்தால் தடை உண்டா? (2) புரோநோட்டின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் கடனை வசூல் செய்யத் தாவாத் தொடரச் சட்டமில்லாவிட்டால், 1954 மார்ச்சு மாதத்தோடு மூன்று வருடக்கெடு முடியும் நோட்டுக்கு எதுவரை பிராது போடக் கெடு உண்டு?

பதில்: (1) விவசாய சம்பந்தமில்லாத கடனாக இருந்தாலும், அக்கடனைக் கொடுக்க வேண்டியவர் விவசாயியாக இருந்தால் அவர்மீது ஒருவருடம் வரை தாவா போட முடியாது; ஜவுளி பாக்கிக் கடனுக்கும் தாவா போட முடியாது. (2) பிராமிசரி நோட்டுக்குக் காலாவதி கெடு நீடிக்கும். அதாவது காலாவதி கெடு கணக்குச் செய்வதில் சென்னைக் கடன் ஒத்திவைப்பு அவசரச் சட்டத்தாலும், பிறகு ஏற்பட்ட 1954ஆம் வருடத்திய 5ஆவது சென்னைச் சட்டத்தாலும் விவசாயி மீது தாவா போட முடியாமல் தடை ஏற்பட்ட காலத்தை நீக்கி, கணக்குச் செய்யலாம். 5-12-1953 முதல் 6-2-1954 வரை அவசரச் சட்டத்தால் தடை ஏற்பட்டிருந்தது. 6-2-1954 முதல் 5-2-1955 முடிய 1954-ஆம் வருடத்திய 5-ஆவது சட்டத்தால் தடை இருக்கிறது. ஆகையால் பிராமிசரி நோட்டுக்குத் தடை ஏற்பட்ட 5-12-1953 தேதியில் பாக்கி காலாவதிக் கெடு எவ்வளவு நாட்கள் இருக்கின்றன என்று கணக்குச் செய்து தடை நீங்கும் 5-2-1955 முதல் அவ்வளவு நாட்களுக்குள் தாவா செய்யலாம்.

## கோர்ட் ஏலத்தில் எடுத்த சொத்தைக் கிரயம் செய்ய ஸ்டாம்பு?

50. கேள்வி: (லெட்சுமணன் செட்டியார்—பழனி.) அடமானம் வைக்கப்பட்டிருந்த ஒரு சொத்தானது வேறு ஒரு புரோ நோட்டுக் கடனுக்காக ஏற்பட்ட டிக்ரிக்காக ஜப்தி செய்யப்பட்டு, கோர்ட் ஏலத்துக்கு வந்தது. அடமானத்துக்கு உட்படுத்தி அதை ஒருவர் ஏலம் எடுத்தார். ஏல சர்டிபிகேட்டும் கிடைத்து விட்டது. அச்சொத்தை ஏலம் எடுத்தவர் அதே தொகைக்கு அதை வேறு ஒருவருக்குக் கிரயம் செய்தால் கிரயப் பத்திரத்திற்கு ஏல சர்டிபிகேட்டுக்குள்ள ஸ்டாம்பு போதுமா? அல்லது அடமானத் தொகைக்கும் சேர்த்து ஸ்டாம்பு வேண்டுமா?

பதில்: கிரய சாசனத்திற்கு ஏல சர்டிபிகேட்டுக்குள்ள ஸ்டாம்பு போதாது. அடமானத் தொகைக்கும் சேர்த்துத் தான் ஸ்டாம்பு வேண்டும். ஸ்டாம்புச் சட்டத்தின் செக்ஷன் 24 என்ற ஷரத்தின்படி, அடமானத்திற் குட்பட்ட ஒரு சொத்தானது கிரயம் செய்யப்பட்டால்

அந்த அடமானத் தொகையிலும் அதன் வட்டியிலும் எவ்வளவு பாக்கி கொடுபடாமலிருக்கிறதோ அத்தொகையும் சேர்ந்து தான் கிரயப் பத்திரத்தின் பிரயோஜனமாகப் பாவிக்கப்பட்டு அத்தொகைக்கு ஸ்டாம்பு வேண்டுமென்றும்; ஆனால் கோர்ட்டு ஏல சர்டிபிகேட்டுக்கு மட்டில் அப்படிக் கணக்குச் செய்ய வேண்டியதில்லை என்றும் இருக்கிறது.

## பாக சொத்தை வேறு அன்னியருக்கு விற்பனை செய்யக் கூடாதென்ற தடை

51. கேள்வி: (கனி—அய்யம்பேட்டை) இரண்டு சகோதரர்கள் தங்கள் தகப்பனால் கட்டப்பட்ட வீட்டைத் தங்களுக்குள் பாகப் பிரிவினை செய்துக் கொண்டார்கள். அவர்கள் யாராவது ஒருவர் தம் பாகத்தை விற்றுவிட எண்ணினால், அதை அடுத்த பாகஸ்தரிடந்தான் விற்க வேண்டுமென்றும், அப்படியின்றி, பிறரிடம் விற்றால் அது செல்லாது என்றும், அவர்களால் செய்து கொள்ளப்பட்ட பாகப் பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவர் தம் பாகத்தை விற்று விடத் தீர்மானிக்கிறார். அடுத்த பாகஸ்தரோ அதை வாங்க விருப்பமில்லை. ஆனால் அது தமக்கு தேவையில்லை என்று கூறவும் மறுக்கிறார். இந்நிலையில் அதை அவர் பிறர் ஒருவரிடம் விற்பதற்குச் சட்டத்தில் இடமுண்டா?

பதில்: சென்ற மாத "வக்கீல்" இதழ் கேள்வி 30-பார்க்கவும். பாகஸ்தர்கள் விற்பனை செய்வதைத் தடுக்கும் இவ்வித ஷரத்துச் செல்லாது.

## லைசென்சு வாங்காத கமிஷன் ஏஜண்டுக்கு விற்பனை வரி உண்டா?

52. கேள்வி: (தங்கய்யா நாடார்-தூத்துக்குடி) கமிஷன் ஏஜண்டுகள் எடுக்க வேண்டிய அரசாங்க லைசென்சை சரிவரக் கணக்குகள் வைத்துக் கொடுக்கும் ஒரு கமிஷன் ஏஜண்டு எடுக்கவில்லையெனில் ஷை நபரை ஒரு வியாபாரியாகப் பாவித்து விற்பனை வரி அதிகாரிகள் அவருக்கு வரி விதிக்கமுடியுமா?

பதில். விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8ன்படி லைசென்சு வாங்கிக்கொண்ட கமிஷன் ஏஜண்டுகளுக்குத் தான் விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது. எவ்வளவு சரிவாக் கணக்குகள் வைத்துக்கொண்டிருந்தாலும் 'லைசென்சு' வாங்காத கமிஷன் ஏஜண்டுகள் மற்ற எல்லா வியாபாரிகளைப்போல் விற்பனை வரி கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்தான். லைசென்சு வாங்கிய கமிஷன் ஏஜண்டுகளும் லைசென்சில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்காவிட்டாலும், விற்பனை வரி கொடுக்கக் கடமைப் பட்டவர்களாவார்கள். கமிஷன் ஏஜண்டுகள் 'வியாபாரி'களே அல்ல என்றும் ஆகையால் அவர்கள் லைசென்சு வாங்கிக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் அவர்கள்மீது விற்பனை வரி விதிக்கக் கூடாதென்று அர்த்தமாகும்படி சென்னை ஹைகோர்ட்டில் 25-2-1950ல் இரண்டு உயர் நீதிபதிகளால் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. (1950 (1] மதராஸ் லா ஜர்னல் 564.) ஆனால் சென்னை ஹைகோர்ட்டில் மூன்று உயர்நீதிபதிகள் அடங்கிய 'புல் பெஞ்ச்'சால் 16-11-1951ல் அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பில் இவ்வபிப்பிராயம் அங்கீகரிக்கப்படவில்லை. கமிஷன் ஏஜண்டுகளும் 'வியாபாரி'கள்தான் என்று மூன்று உயர் நீதிபதிகளும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (1952 (1) மதராஸ் லா ஜர்னல் 494.) ஆனால் கமிஷன் ஏஜண்டாக இருக்கும் 'வியாபாரிகள்' செக்ஷன் 8ன்படி லைசென்சு வாங்கிக்கொண்டால் அவர்கள் விற்பனை வரி கொடுக்கவேண்டியதில்லை. இதுதான் வித்தியாசம்,

## வெளி ராஜ்யத்திற்குச் சரக்கு அனுப்பும் வியாபாரி

53. கேள்வி: (ரத்னசலம் பிள்ளை — கரூர்) நாங்கள் நமது மாகாணத்திலிருந்து வெளி மாகாணத்திற்கும் அனுப்பும் சரக்குகளுக்கு அந்த மாகாண சர்க்கார் நம்மிடமிருந்து விற்பனை வரி வசூல் செய்வார்களா? அப்படிச்செய்வதாக இருந்தால் எந்த முறையில் நம்மிடம் விற்பனை வரி வசூல் செய்வார்கள் என்ற விபரமும், ஷை வெளி மாகாண சர்க்கார் நம்மிடமிருந்து விற்பனை வரி வசூல் செய்வார்களா? அல்லது வெளி மாகாணத்தில் நம்மிடமிருந்து இறக்குமதி செய்யும் வியாபாரியிடம் விற்பனை வரி வசூல் செய்வார்களா?

பதில்: வெளி ராஜ்ய சர்க்கார் அவர்களுடைய விற்பனை வரிச் சட்டப்படி இந்த ராஜ்யத்திலிருந்து சரக்கு அனுப்பும் வியாபாரியிடமிருந்துதான் விற்பனை வரி வசூல் செய்வார்கள். (1954-மார்ச் மாத "வக்கீல்" இதழ் பக்கம் 8 பார்க்கவும்.)

## தாயாரின் சொத்துக்களை வார்சாக அடையும் பெண் இறந்தால்.

54. கேள்வி (சுந்தரேசகுருக்கள்—கூந்தலூர்) ஒரு இந்துக் குடும்பத்தில் தாயார் பேரில் சொத்துக்கள் இருந்து, ஷை தாயார் இறந்த

பின் அச்சொத்துக்களை அவருடைய நான்கு பெண் மக்களும் அடைந்து அனுபவித்து வந்தார்கள். இதில் மூத்த பெண் ஒரு விதவை. அவளுக்குக் குழந்தைகள் இல்லை. இம் மூத்த பெண் இறந்தால் அச்சொத்துக்கு வாரசு யார். அவளுடைய கணவனின் மூத்த சம்சாரத்தின் பெண் மக்களும் பெண் மக்களின் ஆண் மக்களும் இருக்கின்றனர்.

**பதில்:** மூத்த பெண் இறந்தவுடன் அவளுடைய தாயாருடைய சொத்துக்கள் அவளுடைய சகோதரிகளைச் சேரும். அதாவது இறந்த தாயாரின் மற்ற மூன்று பெண்களும்தான் அடைவார்கள். மூத்த பெண்ணின் கணவன் வழிக்கு இச்சொத்து போகாது.

## சுய சம்பாத்தியச் சொத்து

55. **கேள்வி:** (K. P. காமாக்ஷி — வெள்ள மடத்துப்பட்டி) தகப்பனுக்கு இருமனைவிகள். முதல் மனைவிக்கு ஒரு குமாரனும், இரண்டாவது மனைவிக்கு மூன்று குமாரர்களும் உண்டு. சொத்துப் பிரிவினை கிடையாது. முதல் தாரத்து மகனைப் படிக்க வைக்கத் தன்னுடைய சொத்தை ஒத்தி வைத்துப் படிக்க வைத்திருக்கிறார். தகப்பனார் இறந்து விட்டார். முதல் தாரத்து மகன் சம்பாதித்த சொத்துக்களை தம்முடைய மனைவியின் மீது எழுதி வைத்திருக்கிறார். அச்சொத்து இளைய மனைவியின் குமாரர்களுக்குப் பாத்தியதை உண்டா?

**பதில்:** கிடையாது.

## புதிய கிஸ்தி ரசீது நமூனா

56. **கேள்வி:** (வைத்தியநாதையர்—மாயூரம்) இப்போது நடைமுறையில் இருந்து வரும் வாயிதாப் பண ரசீது 18-ம் நெ. நமூனா செல்லாதென 4, 5 வருஷங்களுக்கு முன் கோர்ட் தீர்ப்பு ஒன்று ஏற்பட்டு அதை அனுசரித்து கவர்ன்மெண்டார் 3, 4 வருஷங்களுக்குள் 18-ம் நெ. கிஸ்தி ரசீது நமூனாவை ரத்துச் செய்தும் புதிய நமூனா சர்வே நம்பர் விவரங்களுடன் ஏற்படுத்தியும் G. O. பிரப்பித்து இருக்கிறார்கள். அந்த G. O. நம்பர் தேதி என்ன? புதிய கிஸ்தி ரசீது நமூனாவில் என்ன, என்ன விவரங்கள் இருக்க வேணும், அதைப் பற்றிய பூரா விவரங்களையும் பிரசுரிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**பதில்:** கோர்ட்டுத் தீர்ப்பை அனுசரித்து 5-1-1952 ல் சென்னைச் சர்க்கார் G. O. No: 43 என்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இவ்வுத்தரவின்படி இது வரை அனுஷ்டானத்திலிருந்த 18ம் நெ. வாயிதாப் பண (கிஸ்தி) ரசீதுக்குப் பதிலாக, புதிய நமூனா ஒன்று ஏற்படுத்தி இருக்கின்றனர். இப்புதிய நமூனாவின்படி, வாயிதாப் பணத்திற்காகக் கொடுக்கப்படும் கிஸ்தி ரசீதில் அடியில் கண்ட விபரங்கள் இருக்க வேண்டும். ஜில்லா, தாலுக்கா, கிராமம், பட்டாதார் பெயர், பசலி, கிஸ்தி கொடுக்கப்படும் மாதம், தேதி, கிஸ்தி கொடுப்பவர் பெயர், எந்த பசலிக்காக, பட்டா நம்பர், ஒவ்வொரு சர்வே நம்பருக்கும்:— A ரிஜிஸ்டரில் உள்ளபடி கிஸ்தி; தீர்வை ஜாஸ்தி, அபராதத் தண்ணீர்த் தீர்வை, மரவரி, ஸ்தலஸ்தாபனச் சட்டப்படி லாண்டுசெஸ், நில ஆக்ரமிப்புச் சட்டப்படி விதிக்கப்பட்ட அபராதத் தீர்வை, மொத்த வசூல் தொகை இவை சர்வே நம்பர் வாரியாகவும் விபரமாகவும் இருக்க வேண்டும்.

## விற்பனைவரி 'ரீபண்டு'

57. **கேள்வி:** (வெங்கிடுசாமி நாயுடு—வலங்கிமான்.) 1652—53ல் ஒரு கடையில் ரூ. 2800க்குத் தான் வியாபாரம் நடந்துள்ளது. விற்பனை வரி ஆபீசர் இந்த ரூ. 2800க்கு விற்பனைவரி வாங்கியுள்ளார். அதைக் கடைக்காரர் 'ரிபண்டு' வாங்கமுடியுமா?

**பதில்:** வியாபாரி கட்டிய விற்பனைவரித் தொகையானது தம்முடைய கையைவிட்டுக்கட்டியிருந்தால் 'ரீபண்டு' வாங்கலாம். தாம் வாடிக்கைக்காரர்களின் வசூல் செய்த விற்பனை வரித் தொகையாக இருந்தால் 'ரீபண்டு' கிடைக்காது.

## இந்துச் சட்டம் பிரிபடாத பாகத்தை விற்பனை செய்யலாமா?

58. **கேள்வி:** (சேஷாத்திரி—திருநெல்வேலி) இந்து ஒருவருக்குப் பூர்விகமாய்ச் சில நஞ்சை நிலங்களும் வீடும் உண்டு. ஷியாருக்கு ஒரு மகன் உண்டு. அவன் தகப்பனாரிடம் பாகம் கேட்கவுமில்லை. பாகப்பிரிவினையும் ஆகவிமில்லை. ஷியார் மகன் தகப்பனாரைக் கேளாமலே சொத்துகளைப் பிரிவினையின்றிப் பாதியை விற்றுவிட்டால் சட்டப்படி செல்லுமா?

**பதில்:** பூர்வீகச் சொத்தில் தகப்பனுக்கும் மகனுக்கும் சமபாகம் உண்டு. பாகம் பிரிபடாமல் இருந்தாலும், பிரிபடாத தம்முடைய பாகத்தை விற்றுவிட மகனுக்குச் சட்டப்படி உரிமை உண்டு.

# உங்கள் தீர்ப்பு என்ன



ஹயத் அலி என்பவர் பெயரில் போலீசார் கொண்டுவந்த கிரிமினல் வழக்கு இதுதான். 25—8—1951 தினம் இரவு பத்தரை அல்லது பதினோரு மணி சுமாருக்கு அப்துல் சதார் என்பவர் ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்தார். எதிரி ஹயத்அலி அவரை வலது தோளில் அடிக்கக் கையை ஓங்கினார். ஆனால் அவருடைய கையை அப்துல் சதார் பிடித்துக் கொண்டார். அப்துல் சதாருடைய பிடிப்பிலிருந்து கையை விடுவித்துக் கொண்ட ஹயத் அலியானவர் அவருடைய எதிரேபோய் அவருடைய உடம்பில் இரண்டு இடங்களில் கத்தியால் குத்திவிட்டு ஓட்டம் பிடித்தார். ஓடிய எதிரியை ஜனங்கள் துரத்தினர். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சுபான் என்பவர் ஜனங்களோடு ஜனங்களாக எதிரியைத் துரத்தி, கடைசியில் எதிரியைப் பிடித்து விட்டனர். அங்கிருந்து எதிரி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கிருந்து போலீஸ்காரர்கள் மறுபடியும் குற்றம் நடந்த இடத்திற்கே அழைத்துச் சென்றனர். குற்றம் நடந்த இடத்தைப்பற்றி விவரங்கள் பஞ்சாயத்தார் முன்னிலையில் குறித்துக் கொள்ளப்பட்டன. அதற்குள் இரவு ஒரு மணி ஆகிவிட்டது. மறுபடியும் எதிரியும் போலீஸ்காரர்களும் போலீஸ் ஸ்டேஷன் திரும்பும்போது இரவு மணி ஒன்றரை. அங்கே வந்த அரை மணி நேரத்தில் மற்றொரு பஞ்சாயத்து யாதாஸ்து தயார் செய்யப்பட்டது. இது எதிரி அணிந்திருந்த ஆடைகளைப்பற்றி எதிரி போட்டுக் கொண்டிருந்த 'ஷர்ட்'டின் வலது கமுக்கட்டையிலும், முன் பக்கத்திலும், வலது கழுத்துக் காலரிலும் பின் பக்கத்திலும் 'ட்ரௌசரி'ல் வலது பக்கத்திலும் ரத்தக் கரை இருந்த விஷயம் குறித்துக் கொள்ளப்பட்டது.

எதிரியானவர் அபாயகரமான ஆயுதத்தால் அப்துல் சதாரைக் குத்திக் கடும் காயம் உண்டாக்கியதாக அவர் மீது இந்தியன் பீனல்கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின்படி வழக்குத் தொடரப்பட்டது. இவ் வழக்கை ஒன்பது ஜூரிமார்களுடன் அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி விசாரித்தார். சர்க்கார் தரப்பில், குத்தப்பட்ட அப்துல் சதாரும், எதிரி ஓடும்போது துரத்தினவர்களும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் விசாரிக்கப்பட்டனர்.

எதிரியின் கக்ஷியையும் கவனியுங்கள். "நான் ஒரு பழக்கடைப் புரோக்கர். எனக்கு வரவேண்டிய நிலுவைகளை வசூல் செய்துகொண்டு இரவு 11 மணிக்குத் தெரு வழியே வந்து கொண்டிருக்கும்போது "திருடன்! திருடன்!" என்று பலர் கூவிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தனர். நானும் "திருடன், திருடன்" என்று கத்திக் கொண்டு ஓடும் திருடனைப் பிடிப்பதற்காக அவர்களுடன் ஓடினேன். இரண்டு ரஸ்தாக்கள் சந்திக்கு

மிடத்தில் நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு முன் ஓடிக்கொண்டிருந்த ஒருவன் சாக்கடைக்குள் வேகமாக நுழைந்து விட்டான். எனக்குப் பின்னால் ஓடிவந்து கொண்டிருந்த ஜனங்களில் மூன்று நான்கு பெயர்கள் என் மீது விழுந்தனர். நான் மெள்ளத் தலை கிளப்பி எழுந்திருந்தபோது பின்னால் வந்த இரண்டு மூன்று நபர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு 'இவன்தான் அந்த ஆசாமி' என்றார்கள். இவ்விதம் என்னைப் பிடித்துக் கொண்ட நபர்களில் சப் இன்ஸ்பெக்டர் சுபானும் ஒருவர். கூட்டத்தி லிருந்தவர்களில் சிலர் சுபானும் என்னைச் சேர்ந்தவர்தான் என்று குற்றம் சாட்டினர். பிறகு அவர் போலீஸ்காரர் என்று தெரிந்துகொண்டு அவரை விட்டுவிட்டனர். பின்னால் வந்துகொண்டிருந்த போலீஸ் மோட்டாரில் என்னை ஏற்றி, போலீஸ் ஸ்டேஷன் கொண்டு போனார்கள். பிறகு குற்றம் நடந்த இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றனர். மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப் பட்டேன். அங்கே ஒரு அறையில் என்னை உட்கார வைத்தார்கள். மிகவும் எருக்கமாக இருந்தபடியால் நான் என் ஷர்ட்டைக் கழற்றிப் பக்கத்தில் வைத்துக்கொண்டேன். இதைப் பார்த்த ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் என்னை அணுகி "இது என்ன; உன் அப்பன் வீடா; ஷர்ட்டைக் கழற்றிவிட்டாயே!" என்று சொல்லி என் முகத்தில் மூக்கைக் காட்டி ஓங்கி ஒரு அறை விட்டார். என் மூக்கி லிருந்து ரத்தம் வழிய ஆரம்பித்தது. அதனால் என் ஷர்ட்டிலும் கால் டிரௌசரிலும் ரத்தக்கறை ஏற்பட்டது. அதே கான்ஸ்டபிள் என்னை ஷர்ட்டைப் போட்டுக்கொள்ளும் படி சொன்னார். பிறகு என்னை அவர் போலீஸ் ஆபீசரிடம் அழைத்துச் சென்றார். அவர் என்னுடைய ஆடைகளிலிருக்கும் ரத்தக் கறையைக் கவனித்து அதைப்பற்றி ஒரு பஞ்சாயத்து யாதாஸ்து தயார் செய்தார். நான் குற்றம் ஒன்றும் செய்யவில்லை." —என்று எதிரி கட்சி சொன்னார்.

நீங்கள் இவ்வழக்கில் ஜூரிமார்களாக இருந்தால் என்ன அபிப்பிராயம் கொடுப் பீர்கள்? தயவு செய்து இரண்டொரு விஷயங்களையும் கவனித்து உங்கள் அபிப்பிரா யத்தைச் சொல்லுங்கள். அதாவது (1) எதிரி அப்துல் சதாரைக் குத்தக் காரணம் என்ன? இது விஷயமாகக் குத்துப்பட்டவரே முதலில் ஒன்றும் சொல்லவில்லை. (2) எதிரி உபயோகித்ததாகச் சொல்லப்படும் கத்தி எங்கே? எதிரியையும் சரி, குற்றம் நடந்த இடத்தையும் சுற்று வட்டாரத்தையும் சரி, போலீசார் நன்றாகச் சோதனை செய்தும் இது அகப்படவில்லையே! (3) சர்க்கார் தரப்பில் சாட்சி சொன்ன சப் இன்ஸ்பெக்டராவது, எதிரியைப் பிடித்தவராவது, எதிரி கையில் கத்தியைப் பார்த்த தாகச் சொல்லவில்லை. (4) எதிரியின் ஷர்ட்டிலும் கால்ச் சட்டையிலும் ரத்தக் கறை இருந்ததாக முதலில் சப் இன்ஸ்பெக்டரோ, சாட்சிகளோ கவனிக்கவில்லையே. பிறகு இரவு 1-30க்கு மேல் தானே இது விஷயம் தெரிய வந்தது. (5) போலீஸ் ஸ்டேஷனுக் குள்ளேயே எதிரியை, ரத்தம் வரும்விதம் ஒரு கான்ஸ்டபிள் அடித்தா என்பது நம்பத் தகுந்ததா? (6) எதிரி கத்தியால் அப்துல் சதாரைக் குத்தும்போது ரத்தக்கறை ஏற்பட்டதென்றால், ஷர்ட்டின் முன்புறமும், கால் சட்டையின் முன்புறத்திலும் ரத்தக் கறை பட்டது சரி; ஆனால் எதிரியின் ஷர்ட் பின்புறத்தில் எப்படி ரத்தக்கறை ஏற்பட்டது. உங்கள் தீர்ப்பு என்ன?

* * * *

இவ்வழக்கு ஒன்பது ஜூரிமார்களுடைய உதவியைக் கொண்டு அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜால் விசாரிக்கப் பட்டதென்று சொன்னோமல்லவா? ஜூரிமார்கள் கலந்து ஆலோசித்த பிறகு அபிப்பிராயம் கொடுத்தனர். ஆனால் ஏகமனதான அபிப்பிராயம் இல்லை. ஜூரிமார்களில் ஆறு பெயர்கள் எதிரியானவர் குற்றவாளி அல்ல என்றும் மூன்று பெயர்கள், எதிரி குற்ற வாளிதான் என்றும் அபிப்பிராயம் கொடுத்தனர். அதாவது ஜூரிமார்களில் பெரும்பான்மை யினர், எதிரி குற்றவாளி அல்ல என்றனர். செஷன்ஸ் நீதிபதி இந்த 'மெஜாரிடி' அபிப் பிராயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் 307-ஆவது செக்

ஷன்படி அவர் இவ்வழக்கை முடிவு செய்யப் பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அனுப்பினார். ஹைகோர்ட்டார் இவ்வழக்கின் நடவடிக்கைகளையும் சாட்சி வாக்கு மூலங்களையும் ஆராய்ந்து எதிரிதான் அப்துல்சதாரைக் குத்தினார் என்ற முடிவுக்கு வந்தனர். எதிரிக்கு நான்கு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தனர்.

எதிரி சுப்ரீம் கோர்ட்டின் விசேஷ அனுமதி பெற்று அக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். சுப்ரீம் கோர்ட்டார் ஹைகோர்ட்டாரின் தீர்ப்பை ரத்துச் செய்து எதிரியை விடுவித்தனர். ஜூரிமார்களுடைய அபிப்பிராயத்தைச் சாதாரணமாக நீதிபதி ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது தான் சட்டம். ஒரு செய்கை அல்லது விஷயம் நடந்ததா, நடக்கவில்லையா என்பதை நிர்ணயம் செய்ய வேண்டியவர்கள் ஜூரிமார்களே. ஜூரிகளின் அபிப்பிராயம் காரணமின்றி வக்கிரமாக இருந்தாலும், அல்லது ருசுவுக்கு முரணாக இருந்தாலும், அதை நிராகரிக்க நீதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால் ஒருவழக்கின் விவரங்களையும் சந்தர்ப்பங்களையும் ஆராய்ந்த நியாயமான மனிதர்களில் சிலர் ஒருவிதமாகவும் சிலர் வேறு விதமாகவும் அபிப்பிராயப்படலாம் என்பதுபோல் இருந்தால், ஜூரிமார்களுடைய தீர்மானத்தை நீதிபதி நிராகரிக்க முடியாது. நீதிபதி மட்டில் தனியாக விசாரித்திருந்தால் அவர் வேறு விதமான தீர்மானத்திற்கு வந்திருக்கலாம். இருந்தாலும் அவர் ஜூரிமார்களுடைய அபிப்பிராயத்தை, (விசேஷ சந்தர்ப்பங்கள் இருந்தாலொழிய) ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இவ்வழக்கின் சந்தர்ப்பங்களை ஆராய்ந்தால், இப்படியும் சொல்லலாம்; அப்படியும் சொல்லலாம். ஆகையால் ஜூரிமார்களின் பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளாமல் செஷன் ஜட்ஜ் இவ்வழக்கை ஹைகோர்ட்டு அனுப்பியதும், ஹைகோர்ட்டார் அதை முடிவு செய்ததும் சரியல்ல என்று சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு ஜூரிமார்களின் பெரும் பான்மையினரின் அபிப்பிராயத்தை ஒட்டி எதிரியை விடுவித்தனர். (1954. ஆல்) இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம்கோர்ட்—173.




## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

மக்களுக்கு வேண்டியது மூன்று சுத்தம், அதாவது, மனம். வாக்கு, காயம். அதிலே பிரதானம் காயசுத்தி. காயசுத்தி இல்லாமல் எந்த மனிதனும் அதாவது பாட்டாளி முதல் - பணக்காரர் வரையிலும் (சிறிய உத்தியோகஸ்தர் முதல் பெரிய ஆபீஸர் வரையில்) அவரவர்கள் வேலையைச் சரிவரக் கவனிக்க இயலாது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகவே அதற்காகச் செய்யப்பட்ட அற்புத மருந்து.

ரிஜிஸ்டர் நெ. 138512

## 'ஜெயராம்' காயசுத்தி லேகியம்

குடல், இரைப்பை கோளாறுகளாகிய தீராத வயிற்றுவலி, ஓயாத வாந்தி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், நெஞ்சு, முதுகு, இடுப்புவலி, கிருமிகளின் உபாதை, மூலநோய், நாள்பட்ட மலச்சிக்கல் முதலியவைகளைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும். இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும். போலிகள் அதிகம் இருப்பதால் மேலே கண்ட ரிஜிஸ்டர் நெ. 138512-ஐ கவனித்து வாங்கவும்.

1 சேர் விலை ரூ. 4—8—0 ½ சேர் விலை ரூ. 2—4—0 வி. பி. பி. தனி.

தயாரிக்குமிடம்:—

G. ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிசுவநாதர் கீழவீதி, கும்பகோணம்.

குடல், இரைப்பை கோளாறுகளுக்கு ஆப்ரேஷன் தேவையில்லை.

182280





மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற
—: அறந்தாங்கி :—
786 சங்கு சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்
கட்டி 1-க்கு அணா 0-1-3தான்




தயாரிப்பவர்:—
இ.கா.ரு.மு.காதர் நயினா முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.





"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சந்தாதாருடைய விலாசமும் சரிபார்த்து அனுப்பப் படுவதால் தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 10 தேதிக்குள் உங்களிடம் கிடைக்கா விட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும். சந்தா முடிந்தவர்கள் புதிய சந்தா அனுப்பிய பிறகே அவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும். வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தாத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்ப லாம். சந்தா விபரமும், விளம்பர விகிதமும் முன் அட்டைப் பக்கத்தில் இருப்பதைக் கவனிக்கவும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

# 1954-சிவில் கோர்ட்டுக்களின் கோடை விடுமுறை நாட்கள்.

[குறிப்பு:—ஆரம்ப தேதி, முடிவு தேதி இரண்டு நாட்களும் விடுமுறைக்குட்பட்டவைகளே.]

சென்னை ஹைகோர்ட்: 3-5-54 முதல் 25-6-54 முடிய.

செங்கல்பட்டு ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் செங்கல்பட்டு சப்கோர்ட்டுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய. செங்கல்பட்டு, காஞ்சீபுரம், பூந்தமல்லி, திருவள்ளூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் 8-5-54 முதல் 10-6-54 முடிய.

வடஆற்காடு ஜில்லா: வேலூர் ஜில்லா கோர்ட்டுக்கும், சப்கோர்ட்டுக்கும், 19-4-54 முதல் 10-6-54 முடிய. வேலூர், ஆரணி, ராணிப்பேட்டை, ஷோலிங்கர் திருப்பத்தூர், திருவண்ணாமலை டி. மு கோர்ட்டுகளுக்கும் ஆரணி, திருப்பத்தூர் அடிஷனல் கோர்ட்டுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

தென்ஆற்காடுஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் சப் கோர்ட்டுக்கும் 26-4-54 முதல் 17-6-54 முடிய.

கூடலூர் ஸ்மால்காஸ் கோர்ட், டை அடிஷனல் கோர்ட், கூடலூர், சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், திருக்கோயிலூர், திண்டிவனம், கள்ளக்குறிச்சி டி. மு. கோர்ட்டுகளுக்கு 26-4-54 முதல் 29-5-54 முடிய.

கிழக்கு தஞ்சாவூர் ஜில்லா: நாகப்பட்டினம் ஜில்லா கோர்ட்டுக்கும் மாயூரம் சப்கோர்ட்டுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய. மாயூரம் நாகபட்டினம், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

மேற்குத் தஞ்சாவூர்ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் தஞ்சாவூர், கும்பகோணம் சப்கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய.

கும்பகோணம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவையாறு, வலங்கிமான் டி. மு கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

திருச்சிராப்பள்ளி ஜில்லா: திருச்சி ஜில்லா கோர்ட்டுக்கும் திருச்சி, புதுக்கோட்டை சப் கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய.

திருச்சி அரியலூர், கரூர், குழித்தலை, கரூர் துறையூர் புதுக்கோட்டை டி. மு. கோர்ட்டு 19-4-54 முதல் 22-5-54 முடிய.

மதுரை ஜில்லா: மதுரை ஜில்லா கோர்ட்டுக்கும், மதுரை, திண்டுக்கல் சப்கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய.

மதுரை டவுன் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும், திண்டுக்கல், கொடைக்கானல், மதுரை தாலுக்கா, மதுரை டவுன், மேலூர், பழனி, பெரியகுளம், திருமங்கலம் டி. மு. கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

ராமனாதபுரம் ஜில்லா: ராமனாதபுரம் ஜில்லா கோர்ட்டுக்கும் தேவகோட்டை, ராமனாதபுரம், சிவகெங்கை சப்கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய.

தேவகோட்டை, மானாமதுரை, பரமக்குடி, ராமனாதபுரம், சாத்தூர், சிவகெங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர், டி. மு. கோர்ட்டுகளுக்கு 19-4-54 முதல் 22-5-54 முடிய.

திருநெல்வேலி ஜில்லா: திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டுக்கும், திருநெல்வேலி, தூத்துக்குடி, சப்கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய. அம்பாசமுத்திரம், கோயில்பட்டி ஸ்ரீவைகுண்டம், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்கள்: கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டுக்கும், கோயமுத்தூர் சப் கோர்ட்டுக்கும் நீலகிரி சப் கோர்ட்டுக்கும், கூடலூர் டி. மு. கோர்ட்டுக்கும் 19-4-54 முதல் 10-6-54 முடிய.

கோயமுத்தூர், தாராபுரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், கொள்ளேகாலம், திருப்பூர், உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 19-4-54 முதல் 22-5-54 முடிய.

சேலம் ஜில்லா; சேலம் ஜில்லா கோர்ட்டுக்கும், சப் கோர்ட்டுக்கும் 19-4-54 முதல் 9-6-54 முடிய.

சேலம், சங்கரிதுர்கம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டுகளுக்கும் 19-4-54 முதல் 22-5-54 முடிய.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris.*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street
COIMBATORE.